தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண் - 38

# ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள்

## தொகுதி - 2

**கோவையில் நடைபெற்ற உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டைச் சிறப்பிக்கும் வகையில் தமிழக அரசின் சிறப்பு நிதி உதவியின் மூலம் வெளியிடப்படும் நூல்**

# ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள்

## தொகுதி - 2


பொதுப் பதிப்பாசிரியர்

முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ர. பூங்குன்றன்

முனைவர் செ. இராசு

கி. சு. சம்பத்

இரா. சிவானந்தம்



வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - 600 008

2010 - திருவள்ளுவர் ஆண்டு 2041

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| TITLE | : | **Erodu Mavattak Kalvettukal Vol.2** |
| General Editor | : | Principal Secretary and Commissioner |
| Copy Right | : | Tamilnadu State Dept. of Archaeology |
| Subject | : | EPIGRAPHY |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No. | : | 226 |
| Year | : | 2010 |
| Type Point | : | 12 |
| No. of Pages | : | 152 |
| No. of copies | : | 500 |
| Paper Used | : | 80 Gsm Maplitho |
| Printer | : | Tirumullaivayal Printing Society<br>Chennai - 600 001 |
| Publisher | : | **State Dept. of Archaeology,**<br>Tamil Valarchi Valaagam,<br>Halls Road, Egmore,<br>Chennai - 600 008. |
| Price | : | Rs. 117.00 |

# பதிப்புரை

உலக வரலாற்றில் கல்வெட்டு மிக உயர்ந்த இடத்தைப் பெற்று விளங்குகிறது. கல்வெட்டு எழுதப்பெற்ற காலத்திலிருந்து மாற்றமின்றி பண்டைய வடிவத்துடன் அமைந்துள்ளது. ஆனால் ஓலையில் எழுதப்பெறும் இலக்கியங்கள், கருத்து மாற்றங்கள் பாடபேதங்கள் ஆகியவை மலிந்து காணப்பெறுகின்றன. கல்வெட்டில் ஒருமுறை எழுதப்பெற்ற எழுத்துகளைப் பெயர்த்தெழுதும் அவசியம் இல்லை. அதனால் சொல் திரிபு வருவதில்லை. திருப்பணி போன்றவற்றால் கல்வெட்டுகளைப் பெயர்த்தெழுதுவதால் பெரிய சிக்கல் இல்லை. சான்றுக்கு மூன்றாம் கிருஷ்ணனின் சித்தலிங்க மடக்கல்வெட்டு (கி.பி. 949) திருப்பணிக்குப்பின் முதல் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி. 1070–1124) மறுபடியும் குலோத்துங்கன் காலத்து எழுத்துகளில் பொறிக்கப்பெற்றுள்ளது. மேலும் இக்கல்வெட்டின் தொடக்கத்தில் பழைய கல்வெட்டுப்படி என்று எழுதப் பெற்றுள்ளது. மாற்றியெழுதப் பெற்ற தன்மையைக் கல்வெட்டுகள் காட்டிக் கொடுத்துவிடும். ஆனால் இலக்கியத்தில் அவ்வாறு செய்யப் பெறுவதில்லை. இதனால் வரலாற்றாசிரியர்கள் கல்வெட்டுகளை முதன்மைச் சான்றுகளாகக் கருதுகின்றனர். மேலும் தொல்லெழுத்தியல் அடிப்படையில் கல்வெட்டுகளின் காலம் உறுதிப்படுத்தப் பெறுகின்றது. அதுகொண்டும் கல்வெட்டுகள் வரலாற்றுச் சிறப்புடையவையாக நிற்கின்றன.

பண்டைய அரசியல் வரலாறு மட்டுமின்றி சமயம், பண்பாடு ஆகியவற்றை துல்லியமாக அறிய கல்வெட்டுகளே முதன்மைச் சான்றுகளாக அமைகின்றன.

கல்வெட்டுகள் குறிப்பிட்ட வட்டாரத்தில் வாழ்ந்த மக்கள் வாழ்க்கை, தொழில் (வேளாண்மை, வாணிகம்) புதுக்குடியேற்றங்கள், வாணிக நகரங்கள், மக்களின் குடிப்பெயர்ச்சி, நாட்டுப் பிரிவுகள் ஆகியவை பற்றி ஆய்வு செய்ய அரிய செய்திகளைக் கொண்டுள்ளன. வட்டார வழக்குகள், மொழி நடை ஆகியவை பற்றி பல அரிய செய்திகளைக் கொண்டுள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கடந்த 2005–ஆம் ஆண்டிலிருந்து கல்வெட்டு முனைப்புத் திட்டத்தின் அடிப்படையில் கல்வெட்டுகளைப் படியெடுத்துப்பதிக்கும் பணியை விரைவுபடுத்தி வருகின்றது. குறுகிய காலத்தில்

ஆயிரக்கணக்கான கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ளமை ஓர் அசுர சாதனை. பல மாவட்டங்களில் கல்வெட்டுகள் படியெடுக்கும் நிலை நிறைவுற்றுள்ளது. இதுவரை 38 தொகுதிகளில் 5600 கல்வெட்டுகள் வெளியாகியுள்ளன. இந்தப் பின்னணியில் ஈரோடு மாவட்டம் இரண்டாம் தொகுதியாக இந்நூல் வெளியிடப் பெறுகின்றது. இதுவரையில் வெளியிடப் பெறாத சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள இரவிகோதை செப்பேடு இத்தொகுதியில் வெளியிடப் பெறுவது சிறப்புடையது. சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கும், இச்செப்பேட்டின் நிழற்படங்களை அளித்த தொல்லியல் பிரிவு காப்பாட்சியர் திரு. ரா. பாலசுப்ரமணியன் அவர்களுக்கும் எனது பாராட்டுகள்.

இந்நூலினை வெளிக்கொணர அனைத்துப் பணிகளையும் மேற்கொண்ட முனைவர் ர. பூங்குன்றன் மற்றும் முனைவர் செ. இராசு ஆகியோர் பாராட்டுதலுக்குக்குரியவர்கள். இந்நூலின் பதிப்புப் பணியில் ஈடுபட்ட கல்வெட்டாய்வாளர் திரு. கி.சு. சம்பத், மற்றும் திரு. இரா. சிவானந்தம் அவர்களுக்கும் இந்நூலினை நல்ல முறையில் டிடிபி செய்து அட்டைப் படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர் திருமதி தே.சத்தியவதி ஆகியோருக்கும் எனது பாராட்டுகள். இந்நூலை வெளியிட உரிய நிதியினை அளித்திட்ட தமிழ்நாடு அரசிற்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள் : 1–11–2010
சென்னை – 600 008

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

# முன்னுரை

ஈரோடு மாவட்டத்தின் இரண்டாம் தொகுதியாக இந்நூல் வெளியிடப் பெறுகின்றது. இத்தொகுதியில் பெருந்துறை வட்டம், காங்கயம் வட்டம் ஆகிய வட்டங்களிலுள்ள கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. இந்த வட்டங்களில் உள்ள ஆதியூர், குன்றத்தூர், திங்களூர் ஆகிய ஊர்களில் மிகுதியான கல்வெட்டுகளும், பிற ஊர்களில் சில கல்வெட்டுகளும் இந்தத் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. திங்களூரில் கிடைக்கின்ற முதலாம் விக்கிரமசோழனின் (1004–1047) கல்வெட்டு ஒன்று இடம்பெறுகின்றது. பிற கல்வெட்டுகள் கி.பி. 12ஆம் நூற்றாண்டிலிருந்து பொறிக்கப்பெற்றவை. கிபி 19–ஆம் நூற்றாண்டு வரை கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கவை.

இக்கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ் எழுத்தில் பொறிக்கப்பெற்றவை. வட்டெழுத்து கல்வெட்டு ஏதும் இங்குக் கிடைக்கவில்லை. பல ஊர்களில் கொங்குச் சோழர் கல்வெட்டுகளே மிகுதியும் உள்ளன. போசளர்கள் கல்வெட்டுகள் சில கிடைத்துள்ளன.

**இடைக்காலச் சேரர்கள்**

கி.பி. 9–ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த இரவிகோதை மன்னனின் செப்பேடு ஒன்று பூந்துறையில் கிடைத்தது அது தற்போது சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது. அச்செப்பேட்டின் வாசகம் இத்தொகுதியில் வெளியிடப் பெற்றுள்ளன. இச்செப்பேடுகள் திருமால் கோமிலுக்கு அளிக்கப் பெற்ற தேவதானங்கள் பற்றிக் கூறுகின்றது. செப்பேட்டில் பொறிக்கப் பெற்ற வாசகம் கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பெற்றுள்ளது. வட்டெழுத்து, தமிழ் எழுத்து, கிரந்த எழுத்து ஆகிய எழுத்துகளில் பொறிக்கப் பெற்றுள்ளது.

**கொங்குச் சோழர்கள்**

கொங்குச் சோழர்களில் முதலாம் விக்ரமசோழன் இராஜாதிஜராஜன், உத்தமசோழன், வீரசோழன், இரண்டாம் குலோத்துங்கன், வீரராசேந்திரன், இரண்டாம் விக்கிரமசோழன், ஒருராஜகேசரி, மூன்றாம் விக்ரமசோழன் ஆகியோர் கல்வெட்டுகள் இத்தொகுதியில் உள்ளன. இரண்டாம் வீரசோழன் கல்வெட்டுகள் சக ஆண்டுடன் கிடைக்கின்றன.

இவர்களில் குலோத்துங்கன், மூன்றாம் வீரசோழன், வீரராசேந்திரன் மூன்றாம் விக்கிரமசோழன் ஆகியோர் கல்வெட்டுகளில் அரசர்களே நிலக்கொடை அளித்த செய்தி கூறப்பெறுகின்றது. மேலும் பலதிறத்து மக்கள் கோயில்களுக்கு விளக்குக் கொடை அளித்த செய்தி கூறப்பெறுகின்றது.

## விக்ரமசோழன் II (1256-63)

இப்பெயரில் மூன்று மன்னர்கள் குறிக்கப் பெறுகின்றனர். முதலாம் விக்கிரமசோழன் கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. இக்கல்வெட்டு சகர ஆண்டில் குறிக்கப்பெறுவதால் இம்மன்னன் முதலாம் விக்கிரமசோழன் என்பது புலப்படும். இரண்டாம் விக்கிரமசோழன் ஏழு ஆண்டுகளே ஆண்டான். மூன்றாம் விக்கிரமசோழன் 33 ஆண்டுகள் ஆண்டுள்ளான். ஏழாவது ஆட்சி ஆண்டுகளுக்குமேல் குறிக்கப்பெற்றதால் அவன் மூன்றாம் விக்கிரமசோழன் என்று கொள்ளலாம். இரண்டாம் விக்கிரமசோழன் மிகக் குறுகிய காலமே ஆண்டான். அவன் காலத்தில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுகள் குறைவே.

## ஒரு ராஜகேசரி (கி.பி.1263–73)

இந்தப் பட்டத்துடன் ஒரு கொங்குச் சோழன் ஆட்சி செய்திருக்க வேண்டும் என்பது கொங்கு வரலாற்றாசிரியர்கள் கருத்து. இரண்டாம் விக்கிரமசோழனும் மூன்றாம் விக்கிரமசோழனும் பரகேசரி என்ற பட்டதைப் பெற்றிருப்பதால் இவ்விருவர்களுக்கிடையில் ஒரு இராசகேசரி என்ற பட்டத்துடன் ஒரு மன்னன் ஆண்டிருக்க வேண்டும். வீரபாண்டியன்என்ற மன்னன் திங்களூர்க் கல்வெட்டில் குறிக்கப்பெறுகின்றான். இவனே இரண்டு விக்ரமசோழர்களுக்கிடையில் ஆண்ட இராசகேசரியாக இருக்கலாம். இவன் இருபது ஆண்டுகள் ஆண்டுள்ளான். மூன்றாம் விக்கிரமசோழன் கி.பி. 1273–ஆம் ஆண்டிலிருந்து ஆண்டான். அந்த வகையில் வீரபாண்டியன் ஆட்சியும், மூன்றாம் விக்கிரமசோழன் ஆட்சியும் ஒரே காலத்தில் நடந்திருக்க வேண்டும் எனலாம்.

மூன்றாம் விக்கிரமசோழன் காலக் கல்வெட்டுகள் பல அரியச் செய்திகளைக் கொண்டுள்ளன. இவன் காலத்தில் கோயில்களுக்கு பல கொடைகள் அளிக்கப்பெற்றன. அவற்றில் காசுக் கொடைகளே அதிகம் காரணம் விக்கிரமசோழன் காலத்தில் வாணிகம் மிகுதியாக நடைபெற்றது. விக்கிரமசோழனே நிலக்கொடை அளித்துள்ளான். ஏரிகள் வெட்டப் பெற்றன. நீர்வளம் பெருகியது. நவீன முறையில் பள்ளத்திலிருந்து மேட்டுக்கு ஏற்றப்பெற்று மறுபடியும் பள்ளத்திற்குக் கொண்டு செல்ல குழாயைப் பதித்தனர். அத்தகு நீர்ப்பாசனம் பற்றிய கல்வெட்டுகள், ஏரி, தும்பு ஆகியவற்றை அமைத்தமையைப் பற்றிக் கூறுகின்றது.

## பாண்டியர்கள்

பாண்டியர்களில் வீரபாண்டியன், சுந்தர பாண்டியன் ஆகியோர் கல்வெட்டுகள் இத்தொகுதியில் மிகுதியும் சேர்க்கப் பெற்றுள்ளன. வீரபாண்டியன் கல்வெட்டுகள் சில சக ஆண்டுடன் குறிக்கப்பெறுகின்றன. அதனால் இவனுடைய வரலாற்றாண்டை துல்லியமாகக் கணிக்க முடிகின்றது. இவன் கி.பி. 1265–ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்துள்ளான். இவனுக்குப் பின் சுந்தரபாண்டியன் ஆட்சிக்கு வந்தான். அவன் கி.பி. 1285–ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுள்ளான்.

பாண்டியர்கள் நீர்ப்பாசனத்தில் மிகுந்த கவனம் செலுத்தினர். சுந்தரபாண்டிய பேரேரி, வீரபாண்டிய பேரேரி என்று இரண்டு பேரேரிகள் குறிக்கப்பெறுகின்றன. இம்மன்னர்கள் பெருமாள் கோமிலுக்கும் சிவன் கோமிலுக்கும் அம்மன் கோமிலுக்கும் நிறைய கொடைகளை வழங்கியுள்ளனர்.

## நாட்டுப் பிரிவுகள்

இந்தத் தொகுதியில் குன்றத்தூர், ஆதியூர் போன்ற ஊர்களில் வடகொங்கு இருபது நாடுகளைப் பற்றிக் கூறுகின்றது. நரையனூர் நாடு, பொங்கலூர்க்கா நாடு தென்கரை நாடு, வெங்கால நாடு, தட்டையூர் நாடு, மணவூர் நாடு, கிழங்கநாடு, அரைய நாடு, பூந்துறை நாடு, காங்கய நாடு, இடைப்புழுதி நாடு, நல்லூர்க்கா நாடு, காஞ்சிக்கூவல் நாடு, வடகரை நாடு, குறுப்பு நாடு, வீரசோழ வளநாடு, ஒடுவங்க நாடு, வடபரிசாரநாடு ஆகிய நாடுகள் குறிக்கப் பெறுகின்றன.

இக்கல்வெட்டு வாசகம் வடகொங்கில் நிலைபெற்றிருந்த நிருவாகம் பற்றியமைந்துள்ளது. இருபது நாடுகளுக்கு இருபது சாமந்தர்கள் தலைவர்களாக நியமிக்கப் பெற்றிருந்தனர். மேலும் ஏழு சிவாலயங்கள் குறிக்கப்பெறுகின்றன. அவை அவினாசி, திருமுருகன்பூண்டி, வெஞ்சமாங்கூடல், கருவூர், கொடுமுடி, வானி(பவானி) மன்னியூர் ஆகிய ஊர்களே ஏழு ஊர்களிலும் உள்ள சிவலாயங்கள் ஒட்டச்சு என்ற வரியை இது செலுத்திவந்தனர்.

மேலே கூறப்பெற்ற கல்வெட்டு வாசகம் பலவகையிலும் சிறப்புடையது. கருவூரைச் சுற்றியுள்ள பகுதி சோழர்களின் நேரடி ஆட்சியில் இருந்தது. அப்பகுதியை இணைத்துக் கொண்டு வடகொங்கு என்று பெயரிட்டு தன்னாட்சியின் கீழ் வைத்தான். கருவூர்ப் பகுதியை சோழர் ஆட்சிக்குக் கீழ்க்கொண்டு வர மூன்றாம் குலோத்துங்கன் தன்னாட்சிக்குக் கீழ்க்கொண்டு வந்தான். கருவூர்ப் பகுதி சிறிது காலமே மூன்றாம் வீரசோழன் ஆட்சியின் கீழ் சிறிது காலமே நிலைபெற்றிருந்தது. வீரசோழன் வேறொரு பெயரையும் பெற்றிருந்தான். அப்பெயர் திரிபுவன வீரதேவன் என்பதாகும். இந்த

வடகொங்கு பற்றிய கல்வெட்டுகளில் மட்டும் திரிபுவன வீரதேவன் என்ற பெயர் பயின்று வருகின்றது. அவினாசி கல்வெட்டு ஒன்றில் மட்டும் இந்தப் பெயர் வரக் காணலாம்.

## பெரிய வடுகன் கலகம்

திங்களூர்க் கல்வெட்டொன்றில் வீரசோமேஸ்வரன் கல்வெட்டு குறிப்பிடத்தக்கது. இக்கல்வெட்டில் சக ஆண்டும் குறிக்கப்பெறுகின்றது. அதனால் கி.பி. 1232–ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1252–ஆம் ஆண்டு வரை இவன் ஆட்சி பெற்றிருக்க வேண்டும். கொழுமம் கல்வெட்டொன்று இவன் படையெடுப்பினை பெரிய வடுகன் கலகம் என்று கூறுகின்றது. வீரராசேந்திரன் ஆட்சியில் போசள வீரசோமேஸ்வரன் ஓர் இடையீடு என்றே கொள்ளவேண்டும். வீரராசேந்திரன் ஆட்சியில் ஒரு பதினைந்து ஆண்டுகள் இடையீடு காணப்பெறுகின்றது. இந்தக் காலகட்டத்தில் வீரசோமேசுவரன் ஆட்சி நிலைபெற்றிருந்தது. வடகொங்கில் திங்களூரில் மட்டும் இவன் கல்வெட்டு கிடைக்கின்றது.

## வீரவெள்ளான் III (கி.பி. 1320–1365)

இம்மன்னனுடைய கல்வெட்டுகள் கொங்கு நாட்டில் மிகுதியும் கிடைக்கின்றன. பவானிசாகரில் மூழ்கியுள்ள மாதவப் பொருமாள் கோயில் கல்வெட்டும் பேரூர் பட்டியாண்டார் கோயில் கல்வெட்டும் ஒரே வாசகம் கொண்டவை. அவனுடைய மெய்க்கீர்த்தி அவனுடைய வெற்றிச் செய்திகளைத் தொகுத்துக் கூறுகின்றன. மெய்க்கீர்த்தி வடமொழியில் அமைந்துள்ளது. வடகொங்கிலும் தென்கொங்கிலும் இருந்த நாட்டுச் சபையினர் மாதவப் பொருமாள் கோயிலுக்கு வரிகளை அளித்துள்ளனர். நாட்டுச் சபை போசளர் காலத்தில் சிறப்புற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# SUMMAY OF INSCRIPTIONS
# ERODE DISTRICT - VOL. II

## ADIYUR

**1065/2003** On the north wall of ardhamandapa of Adipuriswara temple. Tamil .Virapandya r.y.15 (A.D. 1280) It records a gift of money by a woman, wife of Thoththan, a merchant from Karaiyur in Kankaya nadu.

**1066/2003** On the same wall of same mandapa of same temple. Tamil. Sundara Pandya, r.y. 12 (A.D. 1297) It records a gift of money (one accu) by an individual from Vellala community who hailed from Thurarclan from Kodhai Padi in Kilkkarai punturai nadu.

**1067/2003** On the same wall of same mandapa of same temple. Tamil. Sundara Pandya, r.y. 6. (A.D. 1291) It records a gift of mony (an accu) for burning twilight lamp in the temple by an individual Kali alias Kali who hailed from Kunteli clan of vellala community.

**1068/2003** On the same wall of same mandapa of same temple.Tamil. Viravallala III. It records a gift of money (one accu) for burning twilight lamp by an individual from Kunteli clan of Vellala community who was living at Adiyur.

**1069/2003** On the same wall of same temple. Tamil. Sundara Pandya, r.y. 6.(A.D. 1291). It records a gift of money (40 panams) for burning a lamp and for ritual during wakingup of deity by a merchant from Podhukkayam alias Colapandiyapuram in Kuruppu nadu.

**1070/2003** On the same wall of same temple. Tamil. Virapandya r.y. 5 (A.D. 1270) It records a gift of money by Kulappillaiyantan silampan from Kunteliclan of Vellala community who was residing at Adiyur.

1071/2003 On the west wall of the same temple. Tamil. SundaraPandya r.y. 30 (A.D. 1315) It records a gift of money (one accu)by a merchant from Podhukkayam alias Colapandyapuram in Kurunagar nadu, for burning twilight lamp.

1072/2003 On the west wall of the sanctum sanctorum of same temple. Tamil. Sundarapandiya r.y. 6 (A.D. 1291). It records a gift of money (one accu) by a merchant from Pudukkayam alias Colapandyapuram in Kurunagar nadu.

1073/2003 On the south wall of sanctum sanctorum of same temple. Tamil. Virapandya, r.y.6. (A.D. 1291). It records a gift of some parts of temple like thirukkattalai tamappadi agavay and Puravay by an individual from Kunteli clan of vellala commmunity who was a resident of Adiyur.

1074/2003 On the south wall of ardhamandapa of same temple. Tamil. Virapandya, r.y. 7 (A.D. 1272). It records that some parts in the temple like Ardhamandapa, front pillar, beam, inner gate and outer gate were built by an individual.

1075/2003 On the south wall of ardhamandapa of the same temple. Tamil. Virapandya, r.y. 7. (A.D. 1272) It records that some temple parts like second row of pillars inner gate and outer gate were built by an individual.

1076/2003 On the south wall of sanctum sanctorum of the same temple. Tamil. Virapandya, r.y. 15 (A.D. 1280) It records a gift of money (one accu) by a merchant from Adiyur.

1077/2003 On the south wall of the sanctum sanctorum of same temple. Tamil. Virapandya, r.y. 22 (A.D. 1287) It records a gift of money for burning twilight lamp by an individual from tura clan of vellala community from Kodaippadi in Kilkaraipunthurai nadu.

1078/2003 On the same wall of Ardhamadapa of same temple, Tamil. King name not mentioned. It records the order of King which directed the temple priests, temple officers and nambimar to part one third of their income to the uvaccar.

1079/2003 On the south wall of Ardhamandapa of same temple. Tamil. Virapandya, r.y. 21 (A.D. 1286) It records a gift of money by an individul for burning twilight lamp in the temple. This individual is mentianed in the previous inscription (1077/2003)

1080/2003 On the south wall of mahamandapa of same temple. Tamil. Vikkiramacholan III, r.y. 3 (A.D. 1276) It records a gift of linde by a Brahmin.

1081/2003 On the slab in the field in the south of the Adipuriswarar temple. Tamil. King name not mentioned. ($18^{th}$ century A.D.) It records the last words in the donation. It records the gift which might have been given to a mutt.

## Ingur

1084/2003 On the slab near Ayyanar statue now in the museum in Kalaimagal Kalvi Nilayam at Erode. Tamil. King Kulottunga II r.y. 7 (A.D. 1203). It records a gift of Ayyanar statue by an individual from Kavala community.

1085/2003 On the light stand in Thampuratti amman temple. Tamil. King name not mentioned. (A.D. 1890.) It records the gift of light stand which was dilapidated.

1085A/2003 On the north wall of mahamandapa of Allaliswara temple. Tamil. Cikkaraya udaiyar (A.D. 1694.) It records a gift of tank to the Allaliswara temple. It gives the names of Pidariyur and name the God Mugamalarndanatha.

1086/2003 On the door jamb of Vallalisvaramudaiyar temple. Tamil. King name not mentioned. (12th century A.D.) It records a gift of door jamb by the Siva brahmin Kumaravelan.

## Kavuthampalayam

1087/2003 On the slab erected on the bank of the tank. Tamil.

1088/2003 On the door jamb of Ardhamandapa of Kudalur Amman Temple. ( A.D. 1869.) It records a gift of construction of sanctum sanctorum and Ardha mandapa.

1089/2003 In Padrakaliamman temple of Kudalur amman temple. It mentions the name Kavuthampalayam.

1090/2003 On the slab near Kudalur amman temple. It records the gift of Palipeeta.

1091/2003 On the lamp post infront of the Padharakali amman temple alias Kudalur amman temple. It records the gift of Garuda pillar infront of the temple.

## Kunnathur

1093/2003 On the south wall of sanctum sanctorum of Laksminarayana perumal temple. Tamil. Sundara pandya, r.y. 27 ( A.D.1392) It records about loan (200 phanas) received by saba of Vikrama chola sathurvethimangalam in Virachola valanadu from temple. The saba had agreed to remmit thirteen Kalams and twenty six phanas as interest to the temple per year in two instalments. It is an interesting inscription for studying saba temple relation.

1094/2003 On the south wall of Ardhamandapa of same temple. Tamil. Sundarapandya 22 ( A.D.1307) It records a gift received by temple priests. Damaged.

**1095/2003** On the south wall of Ardhamandapa of same temple Tamil. Virapandya 24 (A.D. 1289) It records a gift of paddy by saba of Vikrama chola chadhurvedi mangalam to Lakshminarayana perumal temple for conducting Srijayanthi festival in the same temple.

**1096/2003** On the south wall of Ardhamandapa of same temple Tamil. Sundarapandya 22 ( A.D.1288) It records a gift of twelve panam by an individual from Kulothunga chola chadhurvedimangalam in Thirukalumala nadu from Rajadhiraja valanadu of Chola country for buring twlight lamp.

**1097/2003** On the south wall of Ardhamandapa of same temple. Tamil. Virapandya 15 ( A.D.1280) It records a gift of Paddy and money by merchants from Kuruppunadu and nagarathar of Thalunri alias Vikrama chola chadurvedimangalam for daily rituals in the temple. They agreed to accept the punishment when never they failed and taken away the bronze vessals.

**1098/2003** On the north wall of Mahamandapa of same temple. Tamil. King name not mentioned. (16th century A.D.) It records a gift of money twelve panas by an individual of Sathuvayar clan from vallala caste. The pana was mentioned as Rasi palaiyan pulli phanam which might have been issued by local clief.

**1099/2003** On the same wall of same mandapa of same temple. Tamil. Virapandyadya, r.y.15 ( A.D.1280) It records a gift of money (two phanas six month ) by Ur chiefs and Ur assembly of Thalunri alias Vikramachola chadhurvedimangalam for buring twilight lamp infront of Goddesses in Virapandya vinnagaram and Lakshminarayana vinnagara at Kunrathur.

**1100/2003** On the eastern gateway of Lakshiminarayana perumal temple. It records a gift of idols of Nammalvar and God.

**1101/2003** On the side of eastern gateway of same Temple. Tamil. Sundarapandya, r.y.27(A.D. 1312) It records a gift of money by an individual from Visaiyan Kudi from Karunkudi nadu in Pandimandalam for buring twilight lamp.

**1102/2003** On the north side of eastern gate of same temple. Tamil. Posala Viravallala (14th century A.D.) It records a gift of Podigai by an individual from Kanavala clan of Vellala caste. The name Kalingarayan is mentioned.

**1103/2003** On the same wall. Tamil. Sundarapandya, r.y. 27 ( A.D. 1312) It records a gift of money (Ten phanams) for burning a lamp infront of Lakshminarayana perumal by an individual from Devanthai clan of Vellala caste.

**1104/2003** On the same wall left side of eastern gate way of same temple, Tamil Sundarapandya, r.y.27 ( A.D. 1312) It records a gift of 24 panams for burning two twlight lamps by an individual from Thirupperumpor in Kulothunga cholavalanadu in Chola country.

**1105/2003** On the same wall of same mandapa of same temple Tamil Sundarapandya, r.y.28. It records a gift of money (12 panams) by an individual from Kerala country.

**1106/2003** On the same wall of same mandapa of same temple. Tamil. Sundarapandya, r.y.28 (A.D.1313). It records a gift of money ($13^{th}$ century A.D.) by an individual from Eralapuram in Kerala for burning twilight lamp.

**1107/2003** On the same wall of same mandapa, Tamil. Virapandya, r.y.12 (A.D. 1277) It records about Thiruvenkatadasan, who was appointed as temple priest.

**1108/2003** On the bottam of the same wall of same temple, Tamil. Viravallala III, ($14^{th}$ century A.D.) It mentioned about temple priests.

**1109/2003** On the south and west walls of same mandapa, Tamil. Viravallala III, ($14^{th}$ century A.D.) It records a gift of one perpetual lamp by a chief.

**1110/2003** On the separate slab infront of Lakshminarayanap perumal temple. Virapandya r.y. 15. (A.D.1280.) It records an agreement of sabha of Vira Amarapuyankara chola chadurvedi mangalam from Virachola valanadu to measure the paddy as agreed by them previously. They pledged to measure the stipulated measurement of paddy to the temple even during draught period.

**1111/2003** On the slab of prakara wall of Lakshminarayana perumal temple. King name not mentioned. ($13^{th}$ century A.D.) It records a gift of taxes from Vijayamangalam, Tingalur, and Kunrathur by Ur assembly and officials.

**1112/2003** On the north wall of Kunnapuriswara temple Hoyoala Viravallala III.($14^{th}$ century A.D.) It records a gift of twilight lamp in the Kunramudaiyar temple.

**1113/2003** On the northern door jamb of Ardhamandapa. King name not mentioned. ($13^{th}$ century A.D.) Highly damaged.

**1114/2003** On the northern door jamb of Ardhamandapa of Kunrapuriswara temple. Tamil. Vikramacola III, r.y. 2 (A.D. 1275). It records a gift of door jamb by the Devan alias Thennavan from Kunrathur.

**1117/2003** On the south side door jamb. Tamil. Vikramacola III r.y. 2. (A.D. 1275.) much damaged.

**1118/2003** On the south wall of Ardhamandapa , Tamil. Virapandya (13th century A.D.) much damaged.

**1119/2003** On the south wall of Ardhamandapa of same temple. Tamil. Viravallala III (14th century A.D.) It records a gift of money (?) detail lost.

**1120/2003** On the south wall of Ardhamandapa of same temple. Tamil. Viravallala III (14th century A.D.) It records a gift of money for burning twilight lamp by a vellala from Kunratthur.

**1121/2003** On the north wall of Ardhamandapa of same temple. Tamil. Virapandya r.y. 17. (A.D. 1282). It records a gift of door jamb and steps by wife of Kesan from sathanthai clan.

**1122/2003** On the north wall of Ardhamandapa of same temple Tamil (14th century A.D.) It records a gift by a devotee.

**1123/2003** On the door jamb of the gate in the mahamandapa of the same temple Tamil. Virapandya, r.y. 6 (1271 A.D.). It records a gift of door jambs and stair by an individual who was a merchant from vellala caste in Kankaya nadu.

**1124/2003** On the east and north walls of mahamandapa of same temple. Tamil. Virapandya, r.y.20 (A.D.1285). It records a gift of money for lamp by an individual from Devan clan of vellala community.

**1125/2003** On the north wall of mahamandapa of same temple. Tamil. (18th century A.D.). It records a gift of a perpetual lamp and a get for prosperity of his native place. This gift was donated on the occassion of coferment of rulership upon thampa mudhali who was the younger brother of Nalludaiyappar of Dharamangalam.

**1126/2003** On the west wall of mahamandapa of same temple . Tamil. Virapandya, r.y. 6, (1271 A.D.). It records a gift of beams and inner gateway and outer gateway by Nagarathar of Kuruppu nadu.

**1127/2003** On the west and south walls of mahamandapa of same temple. Tamil. Viravallala, (A.D. 1332). It records a gift of money (12 panams) by Vamadevan from Kaikola community.

**1128/2003** On the east wall of mahamandapa of same temple. Tamil. Virapandya(?) (13th century A.D.). It records an order of the King. According to this order the temple priests, temple officers and meanials must divide the income of the temples in Kuruppunadu into nine shares. Among these shares three shares must be given to Uvaccas and remaining six shares must be divided among above said temple authorities.

**1129/2003** On the west wall of sanctum sanctorum of Muthukumarasami temple. Tamil. Sundarapandya 27 ( A.D.1312). It records a gift of money by an individual from Devanthai clan of Vellala community.

**1130/2003** On the south wall of same temple. Tamil. Uttamachola. (A.D. 1100-1117). It records a gift of twilight lamp.

**1131/2003** On the south and north walls of same temple. Tamil. Viravallala(?) It mentions the name Kalingarayan. It records a gift of money by him for burning a twililght lamp.

**1132/2003** On the north and south walls of sanctum sanctorum Tamil. Virachola III (A.D. 1171). It mentions the names of nadus and villages.

**1132A/2003** On the south wall (mathil) of Lakshminarayanasamy temple. Tamil. Virapandya (?) (13th century A.D.). It records the gift of village by name Velliravali which was converted as agicultural land by reclaiming forest.

## KODUMANAL

**1133/2003** On the pillar of Ramasamy temple. Tamil. (18th century A.D.) It records the construction of Ramasamy temple by several clans of vellala community Sathanthai clan of vellala community had donated pilllars in the temple.

**1134/2003** On the door of Attanuramman temple. Several clans of vellala community had donated the door. The nanes of carpenter and blocksmiths are seen.

## SEENAPURAM

**1135/2003** On the step which is ascending to the uphill of Vijayagiri Tamil. King name not mentioned. The step were carved by Muthupalaiyappa pillai son of Chinnaiya Pillai.

**1136/2003** On the flag post on Vijayagiri. It records the gift of flag post by above person.

## Senkalipalayam

**1137/2003** On the palipeeta of Periyanayakiamman temple (19th century A.D.). It records the construction of Palipeeta in the Peruramman temple.

**1138/2003** On the lamp post of Periyanayakiamman temple. Tamil. King name not mentioned. (19th century A.D.). It records the construction of brick structure in Perur amman temple.

**1139/2003** On the entrance of Periyanayaki amman temple. Tamil. (19th century A.D.) It records the construction of Perur amman temple by Thodai clan Of vellala community.

**1140/2003** On the peeda of lion statue in above temple Tamil. (19th century A.D.) It records the gift peeda for lion statue by Palani Gaundan son of Kumara Gaundan from cella clan of Vellala community.

## Thingalur

**1141/2003** On the south wall of sanctum sanctorum of Chandharapuriswara temple. King Veerasomeswara (A.D. 1222) gift of taxes from Teraiyur alias Inthirapuram by Ur assemply (?) for rituals and two perpetual lamps in the Chandrapuriswarar temple. It is an interesting inscription for the study of temple and revenue administration.

**1142/2003** On the south wall of sanctum sanctorum of same temple. Tamil. Virarajendhra, r.y.20 (A.D.1227). It records the gift of some portions of plaster of wall of this temple by the wife of Siriyan udaiyan of sathanthai clan of vellala community.

**1143/2003** On the west south walls of sanctum sanctorum of same temple. Tamil. Kulottunga r.y. nil. (12th century A.D.) It records a gift of tank in Teraiyur for rituals during Kulottunga sandhi working.

**1144/2003** On the south wall of sanctum sanctorum of same temple. Tamil . Kulothunga r.y. nil. It records a gift of village Theraiyur alias Kulothungachola nallur as devadana to the temple, for rituals and renovation works.

**1145/2003** On the south wall of sanctum sanctorum of same temple. Tamil. Vikramachola II, 4 (A.D. 1260) It records the gift oil one Kalam and one Kurani for burning lamp during Pankuni Uttiram festival by Agalanka nadalvan.

**1146/2003** On the south wall of front mandapa of same temple. Tamil. Virarajendra r.y. 35 (A.D. 1242) It records a gift of money (one accu) for burning a twilight lamp.

1147/2003 On the left side of entrance in west wall of front mandapa of same temple. Tamil. Vikramachola III r.y. 13 (A.D. 1286). It records a gift of money (one accu) for burning twilight lamp by Periyan Korran Korran from Vannakkan clan of vellala community.

1148/2003 On the west wall of front mandapa of same temple. Tamil. Virarajendhara, r.y.41 (A.D. 1248) It records a gift of money (one accu) for burning twilight lamp by an individual by name Madavasenaiyar from komukatali clan in vettuva community.

1149/2003 On the pillar in the front mandapa. Tamil. Vikramachola III r.y.2 (A.D. 1275).It records a gift of balipeeda infront of Vinayaka temple in the Thirunadaimaligai.

1150/2003 On the wall of front mandapa of same temple. Tamil. Virapandya r.y. 3 (A.D. 1268). It records a gift of palipeeda by an individual, by name Paruthikudaiyan chokkan pillan who haild from merchant community in Nadalvar nadu.

1151/2003 On the pillar of front mandapa of same temple. Vikrama Chola II r.y. 4.(A.D. 1260). It records a gift of Asthiradevar by a merchant from Pandya country.

1152/2003 On the pillar of front mandapa of same temple.Tamil.Virarajendra r.y. 41 (A.D. 1248) It records a gift of structure for four pillars (?) by assembly of Vettuvas.

1153/2003 On the door jamb in the kitchen the pushpanatha temple. Tamil. Vikrama Chola I, r.y. 40 (A.D. 1044) It records the construction of mandapa in the pushpanatha temple.

1154/2003 On the south wall of sanctum sanctorum of same temple. Tamil. Virapandya 3 (A.D. 1268). It records a gift village by name Thalunri by the King.

1155/2003 On the south wall of sanctum sanctorum of Alagaraja perumal temple. Tamil. Virapandya 14 (A.D. 1279). It records a gift of money (100 Panams) which was deposited into the temple treasury for purchasing three Kalanis of wet land.

1156/2003 On the west wall of sanctum sanctorum of same temple.Tamil. Sundara pandya r.y. 23 (A.D. 1308). It records a gift of money for burning twilight lamp. (twenty two kasua) by an individual from Pandimandalam.

1157/2003 On the south wall of sanctum sanctorum of same temple. Tamil. Virapandya 18 (A.D. 1283). It records a gift of rice for rituals in the temple. The food was offered to mendicant.

**1157A/2003** On a slab in front of Pushpanatha temple. Tamil. Posalar Viravallala III (14th Century A.D.). It records a gift of a village by name Arigani nallur for worslip.

**1157B/2003** On the Palipeeda of same temple. Tamil. (15th Century A.D.) It records a gift of Palipeeda.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. ஆதியூர் | 1 |
| 2. ஈங்கூர் | 22 |
| 3. காவுத்தாம்பாளையம் | 27 |
| 4. குன்னத்தூர் | 35 |
| 5. கொடுமணல் | 81 |
| 6. சீனாபுரம் | 84 |
| 7. செங்காணிபாளையம் | 85 |
| 8. திங்களூர் | 90 |
| 9. பூந்துறை | 115 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 15 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1280 |
| ஊர் | : | ஆதியூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 150/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |

இடம் : ஆதீசுவரமுடையார் கோயில் அர்த்த மண்டபம் வடக்குச் சுவர்.

குறிப்புரை : காங்கய நாட்டுக் காரையூர் வியாபாரி தொத்தன் என்பவரின் மனைவி தேவியார் ஆதீசுரமுடையார் கோயிலில் ஒரு சந்தியா தீபவிளக்கு எரிக்க சிவபிராமணர் வசம் ஓர் அச்சு கொடை கொடுத்தார்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்
2. க [கோச்] சடை(ப்) பன்மரான திரு
3. புவநச்சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டி
4. ய தேவர்க்கு யாண்டு [யரு]வது காங்கைய நாட்
5. டுக் காரையூரில் வியாபரி தோத்தன் மனை
6. க் கிழத்தி தேவியாரேன் குறுப்பு நாட்
7. [டு] ஆதவூரில் நாய(ா)னா[ர்] ஆதீசுரமுடையாற்
8. [குநா]ன் வைத்த சந்தியாதீப விளக்கொன்
9. [றுக்]கு அவ்வூர் காணியுடைய சிவ
10. [பிர]ாமணரில் வாச்சிய கோத்திரத்து
11. [கடை]க் குறுச்சி ஆண்டவனும் பெரிய
12. பிள்ளையப்பனும் சிறுப்பிள்ளைப்பனு

13. . . . [அச்சு] ஒன்று சந்திராதித்தவரை குட

14. ங் கொண்டு கோயில் [பு]குவான் செலு

15. த்துவோமாகவும் பன்மாஹேச்வர

16. ரக்ஷை .உ.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 12 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1297 |
| ஊர் | : | ஆதியூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 151/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 2 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : ஆதீசுவரமுடையார் கோயில் அர்த்த மண்டபம் வடபுறச் சுவர்.

குறிப்புரை : கீழ்க்கரைப் பூந்துறைநாட்டுக் கோதைப்பாடி வேளாளர்களில் தூறர் குலப் பாண்டிய அரையன் என்பவர் ஆதிசுவரமுடையார்க்குச் சந்தியா தீபம் வைக்க சிவபிராமணாகள் வசம் ஓர் அச்சு கொடுத்தார்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க
2. ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யா
3. ண்டு பன்னிரண்டாவது கீழ்க்கரை
4. ப் பூந்துறை னாட்டுக் கோதைப்ப
5. ாடியில் வெள்ளாளன் தூறர்களில்
6. பாண்டிய அரையனேன் தென்குறுப்
7. பு நாட்டு ஆதவூர் னாயனார் ஆதீஶ்வ
8. ரமுடையாற்கு நான் வைத்த சந்
9. தியா தீபம் ஒன்றுக்குக் காணியு
10. டைய சிவப்பிராமணன் வாச்சிய
11. [கோ]த்திரத்து[க்] கடைக் குறுச்சி [ஆ]
12. ண்டவனும் பெரியபிள்ளையப்பனும் சி

13. றுப் பிள்ளைப்பனுக்கும் [ச]ந்திய

14. ா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின

15. அச்சு ஒன்றுங் கைக்கொண்டு கு

16. [டங்ெ]காடு கோயில் புகுவான் செலுத்

17. துவோமாகவும் பன்மாஹேஸ்வர ரை

18. க்ஷை .உ.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 6 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1291 |
| ஊர் | : | ஆதியூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 152/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 3 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : ஆதீசுவரமுடையார் கோயில் அர்த்த மண்டபம் வடபுறச் சுவர்.

குறிப்புரை : குறுப்பு நாட்டு ஆதியூர் வேளாளரில் குண்டெலிகுல காளி காளியான காலிங்கராயன் என்பவர் சந்தியா தீபம் வைக்க காணியுடைய சிவபிராமணர்கள் வசம் ஓர் அச்சு கொடுத்தார்.

## கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க திருபுவ[ன]சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்குத் திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திருநல்
2. லியாண்டு ஆ[றா]வது குறுப்பு நாட்டு ஆதவூர் வெள்ளாழன் குண்டெலிகளில் காளி காளியான காலிங்கராயனேன் ஆ
3. தீஸ்வரமுடை[யாற்கு] [நா]ன் வைத்த சந்தியா தீபத்துக்குக் காணியுடைய சிவப்பிராமண]ரில்] [பெரிய]வாச்சியன் கடைகுறுச்சி ஆண்டவனும் பெரிய பி
4. ள்ளையப்பனும் சிறுப்பிள்ளையப்பனும் சந்தியாதீப விளக்கொன்றுக்கு ஒடுக்கின அச்சு ஒன்றுங் கைக்கொண்டு குடங்கொண்டு கோயில் பு
5. குவான் செலுத்தக் கடவோமாகவும் பன்மாஹேஸ்வர ரக்ஷிக்க உ

த.நா.அ. தொல்லியல் துறை                    தொடர் எண் :- 1068/2003

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : குரோதன |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : கி.பி.14-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : ஆதியூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 153/1967-68 |
| மொழி | : தமிழ் | முன் பதிப்பு | : - |
| எழுத்து | : தமிழ் | | |
| அரசு | : போசளர் | ஊர்க் கல்வெட்டு எண் | : 4 |
| அரசன் | : வீரவல்லாளன் III | | |

இடம் : ஆதீசுவரமுடையார் கோயில் அர்த்த மண்டபம் வடபுறச் சுவர்.

குறிப்புரை : குறுப்பு நாட்டு ஆதியூர் வேளாளரில் குண்டெலிகுலக் காளி என்பவர் ஆதீசுவரம் உடையார்க்குச் சந்தியா தீபம் வைக்க சிவபிராமணர் வசம் ஓர் அச்சு கொடுத்தார்.

## கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாள தேவர் திருவிராச்சியம் பண்ணியருளாநின்ற *கு-ாத*
2. ந வருஷத்து வைகாசி முதல் குறுப்பு நாட்டு ஆதவூரில் வெள்ளாழரில் குண்டெலிகளில் காளி யேன் இவ்வூர் ஆதீ*ஸ்வ*ரமுடை
3. யாற்கு நான் வைத்த சந்தியாதீப விளக்கு ஒன்றுக்கு இவ்வூர்க் காணியுடைய சிவப்பிராணரில் வாச்சி[யகோத்]திரத்துக் கடைக் குறுச்சி ஆண்டவனும் [பெரிய] பிள்ளையப்பனு
4. ம் சிறுப்பிள்ளையப்பனும் வசம் ஒடுக்கின அச்சு ஒன்றுங் கைக்கொண்டு சந்திராதித்தவரை குடங் கெ[ாண்]டு கோயில் புகுவான் செலுத்துவோமாகவும் பன்மாஹே*ஸ்வ*ர
5. *ர*க்ஷை உ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 6 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1291 |
| ஊர் | : | ஆதியூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 154/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 5 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |
| இடம் | : | ஆதீசுவரமுடையார் கோயில் வடபுறச் சுவர். | | | |

குறிப்புரை : குறுநகர நாட்டுப் பொதுக்கயமான சோழ பாண்டியபுரத்து வியாபாரி சிக்கலுடையான் வேந்தன் துறையாண்டானிடம் ஆதீசுவரமுடையார் திருப்பள்ளி எழுச்சி அமுதுபடிக்காக சிவபிராமணர் நாற்பது பணம் பெற்றனர். அப்பணத்தினால் விளக்கு ஒன்று எரிக்கவும் அமுதுபடிக்குக் கொங்கு என்னும் அளவையில் உழக்கரிசியாக ஆண்டு ஆறு கலனே தூணி நெல் கொடுக்கவும் சிவபிராமணர் ஒப்புக் கொண்டனர்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ்சிறக்[க]த் திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு ஆறாவது குறுப்பு நாட்டு ஆதவூர் ஊர்
2. ஊரும் ஊராளிகளோம் எங்களூர் நாயநார் ஆதீஸ்வரமுடையா[ர்]க்குத் திருப்ப[ள்]ளி எழுச்சி அமுதுபடிக்குக் குறுநகர் நாட்டு பொதுக்கய
3. மான சோழ[பாண்டிய] புர[த்து] வியாபாரி சிக்கலுடையான் வேந்தன் துறையாண்[டாந்] [பக்]கல் நாங்கள் உபையமாக வாங்கின சயி இப்பணம் நாற்பதுக்கும் ச
4. ந்திராதித்தவரை விளக்கொன்றுக்கு[ம்] கொங்கால் உழக்கரிசியால் வந்த நெல் அளக்கக் கடவோமா
5. கவும் அளக்குமிடத்து இது விலங்கிநாருண்டாகில் ஸ்ரீ மாஹேஸ்வரர் பத்திரத்தாலே படக்கடவோமாகவும் பட்டும் அமுது படி குறை
6. படாமலே நடத்தக் கடவோமாகவும் இது பன்மாயேஸ்வர ரக்ஷை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 5 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1270 |
| ஊர் | : | ஆதியூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 155/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 6 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |
| இடம் | : | ஆதீசுவரமுடையார் கோயில் மேற்குச் சுவர். | | | |

குறிப்புரை : குறுப்பு நாட்டு ஆதியூர் வெள்ளாளரில் குண்டெலி குல பிள்ளையாண்டான் சிலம்பன் என்பவர் சந்திய தீப விளக்கு ஒன்றுக்குக் காணியுடைய சிவ பிராமணர் வசம் ஓர் அச்சு கொடுத்தார்.

## கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்[க
2. திருபுவனச் சக்ரவத்திகள் ஸ்ரீவீர
3. பாண்டிய தேவற்கு யாண்டு நால
4. ாவதுக் கெதிராவது குறுப்பு னாட்டு ஆ
5. தவூர் வெள்ளாளன் குண்டெலிக[ளில்] குலபி
6. ள்ளை[ய]ாண்டான் சிலம்பனேன் இவ்வூர்
7. [ந]யினா[ர்] ஆதீஸ்வரமுடையாற்கு நான் வை
8. த்த சந்தி[யா தீ]பவிளக்கு ஒன்றுக்கு இவ்வூர் [காணி]
9. யுடைய சிவப்பிராமணரில் வாச்சிய கோ[த்ர]
10. த்துக் கடைக்குறுச்சி ஆண்டவனும் பிள்ளை
11. யப்பனும் சிறுப்பிள்ளையப்பனும் பற்றின
12. [அச்சு ஒன்று] சந்திராதித்தவரை குடங்
13. [கொண்டு] கோயில் புகுவான் செலுத்து ே
14. வாமாகவும் பன்மாஉமஹேஸ்வர ரக்ஷை உ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 30 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1315 |
| ஊர் | : | ஆதியூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 156/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 7 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |
| இடம் | : | ஆதீசுவரமுடையார் கோயில் மேற்குச் சுவர். | | | |

குறிப்புரை : குறுநகர நாட்டுப் பொதுக்கயமான சோழபாண்டியபுரத்து வியாபாரி சிக்கலுடையான் வேந்தன் துறையாண்டை என்பவர் ஆதீசுவரமுடையார்க்குச் சந்தியா தீபம் வைக்கச் சிவபிராமணர் வசம் ஒரு அச்சு பொடையாகக் கொடுத்தார். இவர் சுந்தரபாண்டியனின் ஆறாம் ஆட்சியாண்டில் ஆதீசுவரர்க்கு அமுதுபடிக்கும், திருவிளக்குக்கும் திருப்பள்ளியெழுச்சி விளக்கும் கொடை கொடுத்துள்ளார்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ்சிறக்க திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுன்தரபாண்டிய தேவற்கு திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திருநல்லியாண்டு ௩௰ வது குறுநக
2. ர் நாட்டுப் பொதுக்கயமான சோழபாண்டியபுரத்தில் வியாபாரி சிக்கலுடையான் வேந்தன் துறையாண்டையென் ஆதீஸ்வரமுடையார்க்கு நான் வைத்த சந்தியா தீபத்துக்
3. குக் காணியுடைய சிவப்பிராமணரில் வாச்சிய . . . கள் வேதாண்டாநும் கடைக்குறிச்சி வணத்தாண்டநும் சந்தியாதீப தீபவிளக்கொன்றுக்கு ஒடுக்கிந அச்சு ஒன்
4. றுங் கைக்கொண்டு குடங்கொண்டு கோயில் [புகுவான்] செலுத்தக் கடவோமாகவும் பன்மாயேசுர ரக்ஷை உ

## த.நா.அ. தொல்லியல் துறை    தொடர் எண் :- 1072/2003

மாவட்டம் : ஈரோடு

வட்டம் : பெருந்துறை

ஊர் : ஆதியூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : கொங்குப் பாண்டியர்

அரசன் : சுந்தரபாண்டியன்

ஆட்சி ஆண்டு : 6

வரலாற்று ஆண்டு : கி.பி. 1291

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 157/1967-68

முன் பதிப்பு : -

ஊர்க் கல்வெட்டு எண் : 8

இடம் : ஆதீசுவரமுடையார் கோயில் கருவறை மேற்குச் சுவர்.

குறிப்புரை : குறுநகர நாட்டுப் பொதுக்கயமான சோழபாண்டியபுரத்து வியாபாரி சிக்கலுடையான் வேந்தன் துறையாண்டான் ஆதீசுவரர்க்கு திருப்பள்ளி எழுச்சி விளக்கு ஒன்று வைக்கக் கோயில் காணியுடைய சிவப்பிராமணர் வசம் ஓர் அச்சு கொடுத்தார்.

## கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்கத் திருபுவநச் சக்கரவத்தி
2. கள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு ஆறாவது குறுநகர் நாட்டுப் பொதுக்கயமான சோழபாண்டியபுரத்து வியாபாரி சிக்கலுடையான் வேந்தன்
3. துறையாண்டாநேன் நாயநார் ஆதீ*ஸ்வ*ரமுடையார்குத் திருப்பள்ளியெழுச்சி விளக்கொன்றுக்கும் காணியுடைய சிவப்பிராமணரில் வாச்சிய கோத்திரத்தி
4. ல் கடைக்குறுச்சி ஆண்டவன் . . . . அச்சு ஒன்று கைக்கொண்டு சந்திராதித்தவரை குடங்கொண்டு கொயில் புகுவார் செலுத்தக் கடவோமாகவும்
5. பந்மாஹேம*ஸ்வர ரக்ஷை* .உ:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 6 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1271 |
| ஊர் | : | ஆதியூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 158/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 9 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |
| இடம் | : | ஆதீசுவரர் கோயில் கருவறை தென்புறச் சுவர். | | | |
| குறிப்புரை | : | குறுப்பு நாட்டு ஆதியூர் வேளாளரில் குண்டெலி குல ஆண்டான் சாத்தாண்டான் என்பவர் ஆதீசுவரர் கோயில் திருப்பணியின்போது திருக்கோயில் திருக்கட்டளை அறுதியாக தாமப்படை அகவாய், புறவாய் ஆகியவற்றை தம் உபயமாகச் செய்தார். | | | |

**கல்வெட்டு:**

1. *ஸ்வஸ்திஸ்ரீ* நன்மங்கலஞ் சிறக்க கோவிரா
2. ச கேசரி பந்மரான திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ
3. வீரபாண்டிய தேவற்குத் திருவெழுத்திட்டுச் செ
4. ல்லா நின்ற திருநல்லியாண்டு ஆறாவது குறுப்பு
5. [நா]ட்டு [ஆத]வூரில் வெள்ளாழன் குண்டெலிகளி
6. ல் ஆண்டான் சாத்தாண்டாநேன் நாயனார் [ஆ]
7. *தீஸ்வ*ரமு[டை]யார் திருக்கோயிலிற் திருக்கட்டளை
8. யறுதியாகத் [த]ாமப்படை அகவாய் புறவாய் செய்
9. வித்தேன் ச[ா]த்தாண்டாநே.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 7 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1272 |
| ஊர் | : | ஆதியூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 159/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 10 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |

இடம் : ஆதீசுவரர் கோயில் அர்த்தமண்டபம் தென்புறச் சுவர்.

குறிப்புரை : வீரபாண்டியனின் ஏழாம் ஆட்சியாண்டில் ஆதீசுவரர் கோயில் திருப்பணியின் போது திருக்கோயில் கட்டளையில் அர்த்தமண்டபம், இதில் முதல் கால்ப்படை அகவாய், புறவாய் இவற்றைத் தம் உபயமாகச் செய்தளித்தனர். (பெயர்ப்பகுதி அழிந்துவிட்டது.)

## கல்வெட்டு:

1. *ஸ்வஸ்திஸ்ரீ* நன்மங்கலஞ் சிறக்க கோ
2. விராசகேசரி பந்மரான திருபுவனச்சக்கரவத்தி
3. கள் ஸ்ரீ வீரபாண்டிய தேவற்குத் திருவெழுத்தி
4. ட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு ஏழாவ[து]
5. குறுப்பு நாட்டு . . . . . . . . . . . .
6. யனார் ஆதீ*ஸ்வ*முடையார் திருக்கோயில்
7. க் கட்டளை அத்தமண்டமும் [இதில் முதற்
8. க]ால்ப்படை அகவாய் புறவாய் செய்வித்(தோ)
9. ம் உ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 7 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1272 |
| ஊர் | : | ஆதியூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 161/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 11 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |

இடம் : ஆதீசுவரர் கோயில் அர்த்தமண்டபம் தென்புறச் சுவர்.

குறிப்புரை : ஆதீசுவரர் கோயில் திருப்பணியின்போது வேளாளர்களில் பூமன் குல அவினாசி என்பவர் திருக்கோயில் அர்த்தமண்டத்தில் இரண்டாங்கால் அகவாய் புறவாய் ஆகியவற்றைத் தம் உபயமாகச் செய்தளித்தார்.

## கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் [சிற]
2. க்க [திரு]புவனச்சக்கரவத்திகள்]
3. ஸ்ரீவீரபாண்டிய தேவற்குத் திருவெழுத்தி
4. ட்டுச் செல்[லாநின்ற திருநல்]லியாண்டு ஆறா
5. வத . . . வெள்ளாழன் பூ[ம]
6. களி[ல்] . . . சி யேன் . . . ஆ
7. தீசுரமுடையார் திருக்கோயி[ல்] அத்த மண்
8. டபத்தில் இரண்டாங்கால் அக[வா]ய் புறவாய்
9. செய்வித்தேன் அ[வி]னாசியேன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 15 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1280 |
| ஊர் | : | ஆதியூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 162/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 12 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |
| இடம் | : | ஆதீசுவரர் கோயில் கருவறை தென்புறச் சுவர். | | | |

குறிப்புரை : குறுப்பு நாட்டு ஆதியூர் வியாபாரிகளில் ஆதீசுவரமுடையான் என்பவர் ஆதீசுவரமுடையார்க்கு சந்தியா தீபம் ஒன்று வைக்கக் கோயில் சிவப்பிராமணர் வசம் ஓர் அச்சு அளித்தார்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க தி[ருபு]வனச்சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியா
2. ண்டு ய்ரு வது குறுப்பு நாட்டு ஆதவூ[ரில்] வியாபாரி ம . . . ார் குடையார்களில் ஆதீஸ்வரமுடையானேன் ஆதிஸ்வரமுடையாற்கு நான் வைத்
3. த சந்தியாதீபத்துக்கு காணியுடைய சிவப்பிராமணரில் வாச்சியன் ஆதிமுத்திசங்காண்டாரும் பிள்ளன் கடைக்குறிச்சி யாண்டவனுஞ் சந்தியாதீப விளக்கொன்றுக்கு ஒடு
4. க்கி[ந]* [அ]ச்சு ஒன்றுங் கைக்கொண்டு குடங்கொடு கோயில் புகுவார் எல்லாம் சந்திராதித்தவரை செலுத்தக் கடவோமாகவும் பன்மாயேசுரர் இர
க்ஷை உ

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1077/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 22 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1287 |
| ஊர் | : | ஆதியூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 163/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 13 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |
| இடம் | : | ஆதீசுவரர் கோயில் கருவறை தெற்குச் சுவர். | | | |
| குறிப்புரை | : | கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் கோதைப்பாடி ஊரைச் சேர்ந்த வேளாளரில் தூறர்குலப் பாண்டிய அரையன் என்பவர் ஆதீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைக்கச் சிவபிராமணர் வசம் ஓர் அச்சு கொடுத்தார். இவர் சுந்தரபாண்டியனின் 12-ஆம் ஆட்சியாண்டிலும் சந்தியா தீபம் வைத்துள்ளார். | | | |

## கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ்சிறக்க ஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு இருபத்திரண்டாவது கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுக் கோதைப்பாடியில் வெள்ளாழன் தூறர்களில் பாண்டிய அரைய
2. னேன் குறுப்பு ணாட்டு ஆதவூரில் நாயினார் ஆதீஸ்வரமுடையாற்கு நான் வைச்சச் சந்தியாதீப விளக்கொன்றுக்கு இவ்வூர் காணியுடைய சிவப்பிராமணரில் வாச்சிய கோத்திரத்துக் கடை
3. க் குறுச்சி ஆண்டவனும் பிள்ளையப்பனும் சிறுப்பிள்ளையப்பனும் ஒ[டுக்கின] அச்சு ஒன்றுங் கொண்டு சந்திராதித்தவரை குடங்[கொ]*ண்டு கோயில் புகுவார்
4. செலுத்தக் கடவார்களாகவும் பன்மாஹேஸ்வர ரக்ஷை உ

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | 14-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : ஆதியூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 165/1967-68 |
| மொழி | : தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : தமிழ் | | | |
| அரசு | : - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 15 |
| அரசன் | : - | | | |

இடம் : ஆதீசுவரமுடையார் கோயில் அர்த்த மண்டபம் தெற்குச் சுவர்.

குறிப்புரை : இக்கல்வெட்டுத் துண்டுகள் கீழிருந்து மேல் நோக்கிப் படிக்கும் வண்ணம் எழுதப்பட்ட கல்வெட்டுகள் அறச்சலூர் அறச்சாலையம்மன் கோயிலிலும், திங்களூர் சந்திராபுரீசுவரர் கோயிலிலும் வெட்டப்பட்டுள்ளன.

எல்லாக் கோயில்களிலும் இறைபணியாற்றும் பட்டர், தானத்தார், நம்பிமார் ஆகியோர் தம் வருவாயில் மூன்றில் ஒரு பங்கு உவச்சர்கட்கு அளிக்க சண்டிகேசுவரர் ஓலையாக அளித்த கல்வெட்டு சிதைந்துள்ளது. விசயமங்கலம், குன்னத்தூர்க் கோயில்களிலும் இக்கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது.

## கல்வெட்டு:

### துண்டு: 1

1. கோயில்களும் அ . . .
2. ளையார் கோயில் பி . . .
3. தங்கள் நாட்டில் மாதேவர் . . .
4. ப்பார் நம்பிமாருக்கு . . .

### துண்டு: 2

1. ள் குறுப்பு நாட்டு . . .
2. வைத்து அருளால் . . .
3. அறங்காத்தார் . . .
4. ரும மாரா[ய்]க ப்ப[ண்]டே . . .
5. *சண்டேஸ்வரன்* [ஓலை]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : 21 |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : கி.பி.1286 |
| ஊர் | : ஆதியூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 166/1967-68 |
| மொழி | : தமிழ் | முன் பதிப்பு | : - |
| எழுத்து | : தமிழ் | | |
| அரசு | : கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : 14 |
| அரசன் | : வீரபாண்டியன் | | |
| இடம் | : ஆதீசுவரமுடையார் கோயில் அர்த்த மண்டபம் தென் சுவர். | | |

குறிப்புரை : ஆதியூர் வணிகன் வலயசெட்டி என்பவன் ஆதீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைக்க சிவபிராமணர் வசம் ஓர் அச்சு கொடுத்தார். இவர் சுந்தரபாண்டியனின் 12-ஆம் ஆட்சியாண்டிலும் சந்தியா தீபம் வைத்துள்ளார்.

## கல்வெட்டு:

1. *ஸ்வஸ்திஸ்ரீ* நன்மங்கலஞ்சிறக்க திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு இருபத்தொன்றாவது குறுப்பு நாட்டு ஆதவூரிலிருக்
2. கும் வியாபாரி [உடையான் வ]லயச்செட்டி[யேன்] நாயனார் ஆதீ*ஸ்வ*[ர] முடையாற்கு நான் வைச்ச சந்தியாதீப விளக்கொன்றுக்கு [ஒ]டுக்கின அச்சு ஒன்றுங்
3. கைக் கொண்டே[ன்] [குறுப்]புனா[ட்]டு ஆதவூரில் காணி[யுடைய சிவ]ப் பிராமணரில் வாச்சிய கோத்திரக் கடைக்குறுச்சி ஆண்டவனு[ம்] பெரிய பிள்ளையப்பனும்
4. சிறுப்பிள்ளையப்பனு[ம்] குடங்கொண்டு கோவில் புகுவான் செலுத்தக் கடவோம் பன்மாஹே*ஸ்வர ரக்ஷை* உ

த.நா.அ. தொல்லியல் துறை　　　　தொடர் எண் :- 1080/2003

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : ஈரோடு | | ஆட்சி ஆண்டு | : 3 |
| வட்டம் : பெருந்துறை | | வரலாற்று ஆண்டு | : கி.பி.1276 |
| ஊர் : ஆதியூர் | | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 167/1967-68 |
| மொழி : தமிழ் | | முன் பதிப்பு | : - |
| எழுத்து : தமிழ் | | | |
| அரசு : கொங்குச்சோழர் | | ஊர்க் கல்வெட்டு எண் | : 16 |
| அரசன் : விக்கிரமசோழன் III | | | |

இடம் : ஆதீசுவரமுடையார் கோயில் மகா மண்டபம் தெற்குச் சுவர்.

குறிப்புரை : குறுப்பு நாட்டு விசயமங்கலம் தான்தோன்றிசுவரர் கோயில் காணியுடைய சிவபிராமணர் ஆலம்பாயன் உடையான் முதலியான சைவபுரந்தரச் சக்கரவர்த்தி ஆதீசுவரர் கோயில் திருப்பணியின் போது திருநிலைக்கால் கொடையளித்தார்.

## கல்வெட்டு:

1. . . . . . . .
2. ாந திரிபுவநச் ச
3. க்கரவத்திகள் ஸ்ரீ
4. விக்கிரம சோ
5. ழ தேவற்க்கு யா
6. ண்டு ௩ வது குறு
7. ப்பு நாட்டு விெ[ச]
8. ய மங்கலத்து
9. த்த[ான்டே]தான்றீசுரமு
10. டையார் கோயி
11. [ல்]க் காணி உடைய
12. [ய] சிவப்பிர[ா]*மணரி

13. [ல்] ஆலம் பாயந் முதலியாந

14. [ட]யாந் முதலியாந

15. சைவ புரந்தர சக்க

16. [ர]வத்தி யேந் இகோ

17. [யில்] பி . . .

18. . . ரு நிலை . . .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | 16-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | ஆதியூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 168/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 17 |
| அரசன் | : | - | | | |

இடம் : அதியூரில் ஆதீசுவரர் கோயிலுக்குத் தென்புறம் 200 மீட்டர் தூரத்தில் வயலில் கிடக்கும் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது.

குறிப்புரை : ஆதியூரில் உள்ள மடத்துக்கு யாராவது புண்ணியம் செய்தால் அவர்கட்குப் புண்ணியத் தீர்த்தங்களில் நீராடின பலன் கிடைக்கும். 108 சைவ ஆலயங்களில் வணங்கிய பேறு கிடைக்கும் அவர்கட்குச் செல்வமும் சேரும் முன்பு இக்கல் மடத்தின் அருகில் நடப்பட்டிருக்க வேண்டும்.

## கல்வெட்டு:

1. இங மடதுகு மேன் மே
2. லும் ஒரு புண்ணியம
3. ாய்ச் செய்கிற புண்
4. ணியவான் ஆதாமெ
5. ாருவனுண்டான
6. வன் இராமேசுரதீத்த
7. முஞ் சிதம்பரங் கும்
8. ப கொணதீத்தமும் ந
9. ாகதீத்தமும் சறுவ கெ
10. ங்காதீத்தமும் ஆடின

11. பலந் பெற்று திருப்பா
12. ட்டுப் பெற்ற நூற்றெட்டு(ை)ச
13. வால
14. யமுன்
15. சேவி
16. சர பலந்
17. பெற்று
18. ஐசுறிய
19. ம் மென்
20. மேலு
21. ம் பெற்
22. று இரு
23. கூ கூட
24. வாரா
25. கவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 7 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1203 |
| ஊர் | : | ஈங்கூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச்சோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| அரசன் | : | குலோத்துங்க சோழன் II | | | |

இடம் : ஈங்கூர் குட்டைத் தோட்டம். தற்போது ஈரோடு கலைமகள் கல்வி நிலையக் கலைக்கூடத்தில் உள்ளது.

குறிப்புரை : மேல்கரைப்பூந்துறை நாட்டு ஈங்கையூரிலிருக்கும் காவிலன் குறும்பிள்ளரில் போத்தன் செய்யான் ஆன குலோத்துங்கப் பல்லவரையன் என்பவன் ஈங்கையூரில் அய்யனார் சிற்பத்தை எழுந்தருளச் செய்தமை. அய்யனார் சிற்பம் வழிபடுவோருடன் அருகில் உள்ளது.

## கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்
2. கலஞ்சிறக்க
3. ஸ்ரீகொலோத்
4. துங்கசோழதே
5. வர்க்குத் திருவெ
6. ழுத்திட்டுச்செல்
7. லாநின்ற திருநல்லி
8. யாண்டு ஏழாவது
9. மேல்கரைப்பூந்து
10. றைநாட்டு ஈங்கை

11. யூரிலிருக்குங் காவி
12. லந் குறும்பிள்ளரில்
13. போத்தன் செய்யாநா
14. ன குலோத்துங்கப்
15. பல்லவரையனே
16. ன் அய்யநாரை எழுந்
17. தருளுவித்த தன்மம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | கலி 4991 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1890 |
| ஊர் | : | ஈங்கூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 2 |
| அரசன் | : | - | | | |

இடம் : தம்பிராட்டியம்மன் கோயில் தீபத்தம்ப மண்டபம்.

குறிப்புரை : செம்பராசிக் கவுண்டர் செய்துவைத்த தீபத்ம்பம் பழுதடையவே அவர் வழியினர் மீண்டும் புது தீபத்தம்பம் நாட்டிய செய்தி கூறப்படுகிறது.

## கல்வெட்டு:

1. கலியுகாதி ஷூ சதூகூாகூ௰க சித்திரை
2. மீ ௰ச தேதி செம்பராசிக்கவுண்டன் செய்த கம்பம் சீற
3. ணமாகிவிட்டது பிற்பாடு மக்கள் மக்கள் வெள்ளைமுத்து க
4. வுண்டன் நல்லாக்கவுண்டன் வெள்ளைமுத்துக்கவு
5. ண்டன் மூணுபேர் பேரமார் தம்பிராட்டியம்ம
6. னுக்கு கல் கம்பம் உபயம் உ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | பவ |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1694 |
| ஊர் | : | ஈங்கூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 173/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | மைசூர் உடையார் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 3 |
| அரசன் | : | - சிக்கராய உடையார் | | | |
| இடம் | : | அல்லாளீசுவரர் கோயில், மகாமண்டபம் வடபுறச்சுவர். | | | |

குறிப்புரை : மைசூர் உடையார் மரபினரான சிக்கராய உடையார் (1673-1704) காலத்தில் நஞ்சயராயர் கொங்கு நாட்டில் அதிகாரம் செய்யும்போது ஈங்கூர் ஊரும் ஊரவரும் வல்லாளீஸ்வரமுடையார்க்குக் குளம் அளித்ததை இக்கல்வெட்டு கூறுகிறது. தொடர்ந்து அருகில் உள்ள பிடாரியூரின் நான்கு பெயர்களும், அங்குள்ள சிவபெருமான் திருமுகமலர்ந்த நாதரின் நான்கு பெயர்களும் அடங்கிய ஏழு வெண்பா உள்ளது. (இப்பாடல் பிடாரியூர் சிவலாயத்திலும் வெட்டப்பட்டுள்ளது.)

## கல்வெட்டு:

1. வத்தி மஹாமண்டலிசுர சிக்கராய உடையார் திருவிர. . . .ணியருளாநின்ற காலத்து நஞ்சய ராயர்
2. க் கருணையில்ப் பவ வருசம் வல்லாளயீசுரமுடையா(ர்)க்கு உ . . . குளம் ஊரும் ஊரவரோ . . . ரைய
3. ஏற்குங்கமலபுரம் திருவிருந்தாபுரம் சேற்கின்ற காளி நகர் சென்னி நக
4. ர்காற்குங் கமலாலையர் திருமுகம் அலந்தார் காளிகமலீசர் சென்னி நாதர் . . லமேலே . . . . . (கொற்றவ) . . வன் கெங்கை

### வெண்பா

ஏற்குங் கமலபுரம் தருவிருந் தாபுரம்
சேற்கின்ற காளிநகர் சென்னிநகர்– காற்குங்
கமலாலை யர்திரு முகமலர்ந்தார் காளி
கமலீசர் சென்னிநா தர்.

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.15-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : ஈங்கூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 174/1967-68 |
| மொழி | : தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : தமிழ் | | | |
| அரசு | : - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 4 |
| அரசன் | : - | | | |

இடம் : அல்லாளீசுவரர் கோயில், வாயில் நிலைக் கால்.

குறிப்புரை : பூந்துறை நாட்டு ஈங்கூர் அல்லாளீசுவரமுடையார் கோயிலில் காணியுடையை சிவப்பிராமணன் மார்க்கண்டேய கோத்திரத்து பல்வராயபட்டன் செல்வநயினார் கொமாரவேலன் மனைவி திருநிலைக்கால் அளித்தது கூறப்படுகிறது.)

## கல்வெட்டு:

1. பூந்துரை
2. நாட்டு ஊ
3. ங்குரில்
4. வல்லா
5. ழிஶ்வரமு
6. டையார்
7. கோயி
8. லில் கா
9. ணியுட
10. ய சி(வ)பி
11. ராமண
12. ரில் மார்க்

13. கண்டி

14. ய கோத்

15. திரத்து

16. பல்லவர

17. ாயபட்

18. டன் செல்

19. வ நயினா

20. ர் கொ

21. மார வே

22. லன் ஆவ

23. டயாள்

24. பிற ஷிட்ட

25. ப் பண்

26. ணி நெ

27. ன்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | காவுத்தம்பாளையம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 601/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| அரசன் | : | - | | | |

இடம் : காவுத்தம்பாளையத்தில் குளத்தின் கரையில் நடப்பட்டுள்ள கல்.

குறிப்புரை :

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ வி . . .
2. . ாஸநரிஸ்ரீ . . .
3. திருபுவனச்ச வத்தி கோ
4. னேரின்மை கொண்
5. டான் குறுப்பு னாட்டு வி
6. சையமங்கலத்து சித்
7. திரமேழி விண்ணகரெம்
8. பெருமான் கோயில் ந
9. ம்பிமாற்கும் ஸ்ரீகாரியஞ்செ
10. ய்வாற்கும் ஸ்ரீவைஷ்ணவற்கு
11. ம் நம்மோலை குடுத்த பரிசா
12. வது இன்னாட்டுக் கூடுர் இன்
13. னாயனாற்கு முன்னாளிலே க

14. ல்வெட்டுப்படி யிறையி

15. லியாகையில் இவ்வூர்

16. யின்நாட்டுடன் கூட்டி

17. நம் வாசல் காரியஞ் செய்வ

18. ார்கள் கடமை கொண்டு செ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | விபவ, கலி 4970 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1891 |
| ஊர் | : | காவுத்தம்பாளையம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 601/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 2 |
| அரசன் | : | - | | | |

இடம் : கூடலூர் அம்மன் கோவில் அர்த்த மண்டபம் வாசல் கல்.

குறிப்புரை : ஆலாம்பாளையத்து தென் திசை வேளாளன் குப்பிச்சி கவுண்டர் முதலானோர் காவுத்தம்பாளையம் கூடலூர் பத்திரகாளியம்மன் கோயிலில் கருவறை, அர்த்தமண்டபம் அமைப்பு. கிராமக்குடிகள் அனைவரும் கோவில் மகாமண்டபம் அமைப்பு.

**கல்வெட்டு:**

1. சுபமஷ்து சொஷ்தி கலியுக சகாத்தம் *சஅகூாளய* சாலி வாகன சகா(ந்தம்) *அஎாகூயக*
2. விபவ ஸு கார்த்திகை *மீ* உகூ காவுத்தம்பாளையம் கிறாமங் கூடலூர்
3. பத்திரகாளியம்மன் கோவில் ஆலாம்பாளையத்திலிருக்கும் தென்தி
4. ச வேளாளன் ஆருமுகத்தர் கவுண்டர் மகன் சின்னணன் குளந்தையண்
5. ணாமலை கவுண்டன் கடசிகுப்பிச்சி கவுண்டன் இந்த நாலுபேரும் கெற்ப
6. கிரிக மண்டபம் அர்த்தமண்டபமும் மேல்படி கிராமத்து குடிகள
7. னைவரும் மகாமண்டபமும் இந்தப்படி புதுசாயிகல்லு மண்டபம்
8. . . லகண்டனு . மணியம் சின்னகவுண்டனும் முன்நின்று கட்டி வைத்தது அம்மன் (துணை)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.19-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | காவுத்தம்பாளையம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 3 |
| அரசன் | : | - | | | |

இடம் : கூடலூர் அம்மன் கோவில் (பத்ரகாளியம்மன் கோயில்)

குறிப்புரை : காவுத்தம்பாளையம் கவுண்டர் கோயில் அமைப்புப் பணி.

## கல்வெட்டு:

1. காவுத்தம்
2. பாளைய கவுண்டர்
3. குல குடியானவரில்
4. தாசவர்
5. கமே . . .
6. . . . ரெ
7. . . . . ம்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : - |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : கி.பி19-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : காவுத்தம்பாளையம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : - |
| மொழி | : தமிழ் | முன் பதிப்பு | : - |
| எழுத்து | : தமிழ் | | |
| அரசு | : - | ஊர்க் கல்வெட்டு எண் | : 4 |
| அரசன் | : - | | |

இடம் : கூடலூர் அம்மன் கோயில் தனிக்கல்.

குறிப்புரை : கூடலூர் அம்மன் கோயில் குறிச்சியை (பலிபீடம் முன்புள்ள அமைப்பு) காவுத்தன்பாளையம் பெரிச்சி மகன் பெருமான் பொம்மி என்பான் அமைத்தமை.

## கல்வெட்டு:

1. கா
2. வுத்தன்
3. பாளையம்
4. பெரிச்சம
5. கன் பெரு
6. மான் பொ
7. (ம்)மி வச்ச
8. குறி
9. ச்சி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | விகாரி 19-ஆம் நூற். |
| ஊர் | : | காவுத்தம்பாளையம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 5 |
| அரசன் | : | - | | | |

இடம் : பத்ரகாளியம்மன் கோயில் என்ற கூடலூர் அம்மன் கோவில் - விளக்குத் தூண்.

குறிப்புரை : கூடலூர் பத்திரகாளியம்மன் கோயில் கெருடகம்பத்தை கூடலூர் பள்ளிக்கூடத்துக் கவுண்டர், வன்னியக் கவுண்டன் முதலானோர் அமைத்தமை.

**கல்வெட்டு:**

1. கலியுகம் சகா . . .
2. . . . விகாரி
3. தேதி கூடலூருக்குச் சேர்ந்த
4. வீரப்ப மகன் கந்த கோலத்தாறாகிய பள்ளிக்
5. குடத்துக் கவுண்டன் மகன் மொக்ககவுண்டரு
6. ம் வூருபள்ளி கவுண்டன் மகன்(வ)ன்னிய
7. கவுண்டன் கூடலூரு பத்திரகாளி அம்ம
8. னுக்கு கெருடகம்பம் வைய்த்தான் . . . .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | துன்மதி 19-ஆம் நூற். |
| ஊர் | : | காவுத்தம்பாளையம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 6 |
| அரசன் | : | - | | | |

இடம் : கூடலூர் அம்மன் கோயில் சிம்மக்கொறடு.

குறிப்புரை : குமாரகவுண்டன் மகன் ஆறுமுகன் என்பான் அம்மன் கோயிலில் சிங்கக்கொறடு உபயம்.

## கல்வெட்டு:

1. துற்மிதி ஸ்ரீ ஆனி மீ
2. க தீ உ குமாரகவுண்டன் மகன்
3. ஆறுமுகன் அம்மனுக்கு சி
4. ங்கக் கொறடு பண்ணி
5. வச்சது உபயம் உ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 27 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1312 |
| ஊர் | : | குன்னத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 175/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழும் கிரந்தமும் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் கருவறை தெற்குச் சுவர்.

குறிப்புரை : வீரசோழ வளநாட்டு முகுந்தனூரான விக்கிரம சோழச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் தங்களூர் அணைக்கு கல்லிட்டுப் பழுது பார்க்க குன்னத்தூர் இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் பண்டாரத்தில் 200 பணம் கடன் பெற்றனர். அதற்கு 13 கலம் நெல்லும் 26 பணமும் வட்டியாகத் தந்நதனர். அதை வருடத்தில் இரு தவணைகளாகச் செலுத்தினர். அதன்மூலம் இறைவன் திருநட்சத்திரமான திருவாதிரையில் தீர்த்தவிழா எடுத்துப் பதினாறு வைணவர்கட்குச் சோறிட வேண்டும் என்றும் கூறினர். வட்டியை விளையிலும், விளையாது ஒழியிலும் ஊர் கேடு போனாலும் அளிக்க ஒப்புக் கொண்டனர்.

## கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்ச[ட] பன்[ம]ரான திருபுவனசக்ரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு ௨௰௭ . . . . . . வக்ஷத்து த்ரயோதஶியும் சனிக்கிழமையும் பெற்ற உத்திராடத்து நாள் குறுப்புனாட்டுக் குன்றத்தூரில் திரு

2. மேற்கொயில் னாய[நா]ர் லக்ஷ்மி நாராயணப் பெருமாள் கோயிலில் நம்பிமாருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் . . . ராய . . . செய்வார்களுக்கும் வீரசோழ வளநாட்டு முகுந்தனூரான விக்ரமசோழச் சதுர்வேதிமங்கலத்து ஸபை

3. யோம் பிடிபாடு குடுத்தபடியாவது எங்களூரணைக்குக் கல்லிட இந்நாயனார் ஸ்ரீபண்டாரத்தில் வாங்கின ௺ ௨௱ இப்பணமிருநூற்றுக்கும் உடையமாக நாங்கள் ஆண்டொன்றுக்கு இறுக்கும் ௧௰௩ம் ௺ ௨௰௬ம்

4. இந்நெல்லு பதின்முக்கலமும் பணம் இருபத்தாறும் வாங்கிக் கொண்டு இந்நாயனார் திரு ப . . . . நாள் திருநக்ஷத்ரமாந திருவாதிரையிலே தீர்த்தம் கொண்டாடி பதினாறு வைஷ்ணவர்களுக்கு அமுது

5. செய்யப்பண்ணுவிப்பார்களாகவும் இந்நெல்லும் பணமும் குடுக்குமிடத்து அற்பசி மாஸத்திலே ஒன் . . . . . . . . . . திலே ஒன்று பாதியுமாக விளையிலும் விளையாதொழியிலும் ஊரிற்கேடு போனாலுமளப்போ

6. மாகவும் இப்படி சந்த்ராதித்தர்வரை செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்வராக. . . . . . . . . . . பண்ணிக் குடுத்தோம் ஸபை யோம் இப்படிக்கு சிஷ்டகுமாரப். . . . . . காளமேகஹட்டனேன்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 22 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1307 |
| ஊர் | : | குன்னத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 176/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழும் கிரந்தமும் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 2 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் அர்த்த மண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் பிறர் அளித்த கொடை ஒன்றை ஏற்றுக் கொண்ட விபரம் கூறப்பட்டுள்ளது.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு
2. திரண்டாவது குறுப்பு நாட்டுக் குன்றத்தூரில் நாயநார் யிலக்குமி நாராயணப் பெருமாள் கோயிலிலிருக்கும் நம்பிமா . . . .
3. . . . . . . . . . . . . யிலி உடிகூ பூவ<sup></sup>மாக மூன்றொபாதிகள் . . .

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1095/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 24 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1289 |
| ஊர் | : | குன்னத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 177/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழும் கிரந்தமும் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 3 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |

இடம் : இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் அர்த்த மண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : வீரசோழவளநாட்டு அருளாளநாதன் திருவிடையாட்டம் முகுந்தனூரான விக்கிரமசோழச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் குன்னத்தூர்க் கோயிலில் ஆண்டுதோறும் ஸ்ரீஜெயந்தி கொண்டாடவும், அந்நாளுக்கு உண்டான அமுதபடிக்கும், வெஞ்சனங்களுக்கும் ஆண்டுதோறும் எட்டுக்கல நெல் கொடுப்பதாகவும் குன்னத்தூர் இறைவன் திருமுன் ஒப்புக்கொண்டனர்.

## கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரிபந்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு உச தை மாதத் தொருநாள்
2. [வீர] சோழவளநாட்டு அருளாளநாதன் திருவிடையாட்டம் முகுந்தனூரான விக்கிரமசோழச்சதுர்வேதி மங்கலத்து ஸபையோம் குறுப்புநாட்டு கு
3. [ன்ற]த்தூரில் வீரபாண்டிய விண்ணக[ர்] நாயனார் லக்ஷ்மிநாராயணப் பெருமாளுக்கு நாங்கள் திருக்கை மலரிலுதகம் பண்ணிக்குடுத்தபடி
4. [யா]வது எங்கள் தர்மமாக ஸ்ரீஜயந்தித் திருநாளைக்கு அமுதுபடி விஜனாதி உள்பட காலாலே இந்நாள் முதலாண்டுதோறும் வந்த ஆள்வசம் எண்கலனெல்லு
5. [அளப்] போமாகவும் இப்படி இத்தன்மம் சந்திராதித்தர் வரை செலுத்தக்கடவோமாகவும் இப்படிக்கு செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொ
6. [ள்வத]ாக ஸாஸநம் பண்ணிக்குடுத்தோம் இந்நாயநாற்கு முகுந்தனூரான விக்கிரமசோழச்சதுர்வேதி மங்கலத்து ஸபையோம் இப்படிக்கு ஷட்க்குமார
7. எழுத்து இப்படிக்கு . . . . . . . .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 3 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1288 |
| ஊர் | : | குன்னத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 178/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழும் கிரந்தமும் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 4 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் அர்த்த மண்டபத் தெற்குச் சுவர்.

குறிப்புரை : இராஜாதிராஜ வளநாட்டுத் திருக்கழுமலை வளநாட்டு அகரம் குலோத்துங்கசோழச் சதுர்வேதிமங்கலத்து புவனி முழுவதுடைச்சேரியைச் சேர்ந்த திருநடைமாடபட்டன் நாயகரான சந்திரசேகரபட்டநிடம் 12 பணம் பெற்று கோயில் நம்பிமாரில் பாரத்வாஜி திருவேங்கடதாசன் அழகப்பெருமாள் சந்தியாதீபம் எரிக்க ஒப்புக் கொண்டார்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மரான த்ரிபுவனச் சகக்ரவத்திகள் ஸ்ரீ சுன்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு மூன்றாவது மாசி மா
2. தம் குறுப்பு நாட்டு குன்றத்தூரில் நாயனார் லக்ஷ்மிநாராயணப்பெருமாள் கோயிலில் நம்பிமாரில் பாரத்வாஜி திருவேங்கட ஶாஸன் அழகப்பெருமாளேன்
3. இராஜாதிராஜ வளனாட்டு திருக்கழுமல வளநாட்டு அகரம் ஸ்ரீகுலோத்துங்கசோழன் தனிநாயகச் சதுர்வேதிமங்கலத்து புவனி முழுதுடைச்சேரி ஸ்ரோ[த்ரிய]திருநடைமாட பட்ட
4. ன் நாயகரான சந்த்ரசேகரபட்டன் பக்கல் வாங்கின பணம் ௰௨ க்கும் ஒரு ஸந்த்யாதீபம் சந்த்ர[ா]தித்த வரை குடம் கொண்டு கோயில் புகுவார் நடத்துவதாக கல்வெட்டிக் குடுத்தேன் அழகப் பெருமாளேன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 15 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1280 |
| ஊர் | : | குன்னத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 179/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழும் கிரந்தமும் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 5 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |

இடம் : இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் அர்த்த மண்டபம் வடக்குச் சுவர் மேல் பகுதி.

குறிப்புரை : குறுப்பு நாட்டு வியாபரிகளும் தாளுன்றியான விக்கிரம சோழபுர நகரத்தார்களும் இணைந்து இலட்சுமி நாராயணப் பெருமாளுக்கு அமுதுபடிக்குத் தினமும் காணத்தால் நாழி அரிசியாக ஆண்டுக்கு நெல் பத்துக் கலமும், கறியமுதுக்காகவும் வெஞ்சனத்திற்காகவும் ஆண்டு ஒன்றுக்குப் பத்துப் பணமும் சித்திரை மாதம் விற்ற விலைப்படி கொடுப்பதாக ஒப்புக்கொண்டனர். ஒரு குடியிருந்தாலும் கொடுப்போம் என்றும், கொடுக்காத போது மண்கலம் தகர்த்து வெண்கலம் பறித்துக் கொள்ளலாம் என்றும் எழுதித் தந்தனர். பல ஊர் வணிகர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

## கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரிபந்மரான திரிபுவனசக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டியதேவர்க்கு திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியா[ண்]டு பதினஞ்சாவது குறுப்பு நாட்டு வியாபாரிகளும் இன்னாட்டுத் தாளுன்றியான விக்கிரம சோழபுர நகரத்தோமும் இன்னாட்டுக் குன்றத்தூர்த் திருமேற்கோயில் வீரபாண்டிய விண்ணகர நாயனார் லக்ஷிமிநாராயணப் பெருமாளுக்கு அமுதுபடிக்கு இன்னாள் முதல் நாள் ஒன்றுக்கு ஒரு சந்திக்கு காணத்தால் நாழி அரிசிக்கும்
2. ஐஞ்சிரண்டாக வந்த நெல் பதின்கலமும் கறிஅமுது விஞ்சனத்துக்கு ஆண்டொன்றுக்குப் பத்துப் பணமும் இன்னெல்லும் சித்திரை மாதம் விற்ற

விலைப்படி ஆண்டுதோறும் இந்நாட்டில் ஒரு குடி இருக்கிலும் இப்படி முட்டாமல் செலுத்துவோமாகவும் இப்படி செலுத்துமிடத்து மண்கலந் தகர்த்து வெண்கலம் எடுத்தும் கொள்ளக் கடவதாகவும் இப்படி சம்ம

3. தித்து செம்பிலும் சிலையிலும் வெட்டிக்கொள்ளக் கடவதாக உதகம் பண்ணிக் குடுத்தோம் இன்னாட்டோமும் நகரத்தோமும் இப்படிக்கு விசையன் மங்கலத்திருக்கும் வியாபாரி திருவன் சுந்தரப்பெருமாள் எழுத்து இப்படிக்கு விசை[ய]ன்[ம]ங்கலத்திருக்கும் வியாபாரி பொன்னம்பலக்கூத்தன் மணிய ஆரியனெழுத்து இப்படிக்குத் திங்களூரிலிருக்கும் வியாபாரி சீராளன் சொக்க கூத்தனான அஞ்சலென்ற பெ

4. ருமாள் தாதனெழு[த்]து இப்படிக்கு திங்களூ[ரிலி]ரு[க்]கும் வியாபாரி பெரியாளனெழுத்து இப்படிக்கு குன்றத்தூரிலிருக்கும் வியாபாரி அழகிய தேவன் கிளியனான உய்யநெறி காட்டினான் எழுத்து மேற்படியூரிலிருக்கும் வியாபாரி . . . . . . .

## த.நா.அ. தொல்லியல் துறை          தொடர் எண் :- 1098/2003

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | விரோதி, கி.பி.16-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | குன்னத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 180/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 6 |
| அரசன் | : | - | | | |

இடம் : இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் மகா மண்டப வடபுறச் சுவர்.

குறிப்புரை : குன்றத்தூர் வேளாளரில் சாத்துவாயர் குலகேசன் அம்பலத்தாடுவான் இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலில் சந்தியா தீபம் வைக்க இராசி பாலையன் புள்ளிப்பணம் 12 வைத்தார் (கிருஷ்ண தேவராயர் (1509-1529), அச்சுததேவராயர் (1529-1542) காலத்தில் கொங்கு நாட்டுப் பகுதியில் உயர் அலுவலனாக இருந்த பாலையதேவன் தன் பெயரில் வெளியிட்ட நாணயம் பாலையன் புள்ளிப் பணம்).

## கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ விரோயி ஸம்(வ)ஸ்ஸரத்து ஆனி மாத[த்தில்] குறுப்பு நாட்டுக் குன்றத்தூரில் வெ[ள்]*ளாழன் சாத்து[வாய]ரில் கேசன் அம்பலத்தாடுவாற்கு மேற்படியூரில் நாயனார் இலக்ஷி[நா]ராயணப் பெருமாள் கோயிலில் நம்பிமாரில் ஹாரதாஸ[ஹொ]தூத்து திருவேங்கடதா[ஸநு] ஆயப்பிள்ளையேன் கல்வெட்டிக் குடுத்தபடியாவது இற்றை நாளில் இவர்பக்கல் நாயினார் இலக்ஷிமி நாராயணப் பெருமாள் திருமுன்பே சந்தியா தீபவிளக்கு எரி
2. ப்பதாக வாங்கின இரா(சி) பாலையன் புள்ளி ௰௨ இப்பணம் பன்னிரண்டும் பற்றிக் கொண்டு சந்தியாதீபம் செலுத்தக் கடவேனாகவும் இம்மரியாதி . . . . . (கு)டங்கொண்டு கோயில் புகுவ[ார்]* எரிக்கக் கடவார்களாகவும் இப்படி சம்[ம]தித்து கல்வெட்டிக் குடுத்தேன் ஆயப்பிள்ளையென் உ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 15 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1280 |
| ஊர் | : | குன்னத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 181/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 7 |
| அரசன் | : | வீரபாண்டிய தேவர் | | | |

இடம் : இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் மகா மண்டப வடபுறச் சுவர்.

குறிப்புரை : தாளுன்றியான விக்கிரமசோழபுரத்து ஊரும் ஊராளிகளும் குன்றத்தூர் வீரபாண்டிய விண்ணகர நாயனார் நாச்சியார் லட்சுமி நாராயணப் பெருமாள் மடிமேல் வல்லியார்க்கு நந்தாவிளக்கு வைக்க மாதம் இரண்டு பணம் கொடுப்பதாக ஒப்புக் கொண்டனர்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகே[கசரி] பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ[வீர] பாண்டிய தேவற்கு யாண்டு ௰௫ ஆவது காத்திகை மாதமுதல் குறுப்பு
2. நாட்டுத் திங்களூர் நாயனார் அழகப்பெருமாள் [தி]ருவிடையாட்டந் தாளுன்றியான விக்கிரமசோழபுரத்து ஊரும் ஊராளிகளோம் இன்னாட்டு குன்றத்தூர் திருமேற்கோயில் வீரபாண்டிய விண்ணகர நாயனார் ஒ
3. க்ஷ்மிநாராயணப் பெருமாள் நாச்சியார் மடிமேல் வல்லியார் திருமுன்பே ஒரு திருநந்தாவிளக்கு சந்த்ராதித்தவரை எரிவதாக திருக்கை மலரிலே உதகம் பண்ணிக் குடுத்தோம் தாளுன்றி . . . . . . . . . . . .
4. மாஸத்திரண்டு பண[ம்]* நம்பிமார் வசம் குடுப்போமாகவும் இப்பணங் குடாதே முட்டுப்படி லன்றாடு ஸ்ரீவைஷ்ணவர் திருவேளைக்காறர் எங்(க)*ளைத் தடுத்து மறித்து மண்கலந் த(கர்)த்தும் வெண்கலம் பறித்தும் கொள்ளக்கட . . . .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | குரோதி, |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.17-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | குன்னத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 182/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 8 |
| அரசன் | : | - | | | |

இடம் : இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் மகாமண்டப நுழைவு கிழக்குச் சுவர்.

குறிப்புரை : ஈரோட்டைச் சேர்ந்த சமைய மந்திரி என்பவர் நம்மாள்வாரையும், எம்பெருமாள் வாரையும் எழுந்தருளச் செய்தார்.

## கல்வெட்டு:

1. குறோதி ஸு சித்திரை ரு ௨ இரோட்டு சமைய ம
2. ந்திரி உபையம் நம்மாழ்வாரும் எம்பெருமா
3. ள்வாரும் நாட்டுக் கணக்கு கஞ்சுகன் எழுத்து
4. அனந்த பிள்ளை . . .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 27 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1312 |
| ஊர் | : | குன்னத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 183/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 9 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் மகாமண்டப நுழைவு - கிழக்கு, வடபுறச் சுவர்.

குறிப்புரை : பாண்டி மண்டலத்துக் கருங்குடி நாட்டு விசையங்குடி அரையன் சூரிய தேவனான குவலயத்தரையன் இறைவன் திருமுன்பு சந்தியா தீபம் வைக்க பன்னிரண்டு பணம் கொடுத்தார்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மரான தி்ரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு இருபத்தேழாவது வைகாசி மாதம் குறுப்பு நா
2. ட்டுக் குன்றத்தூர் நாயனார் லக்ஷ்மிநாராயணப் பெருமாள் கோயில் நம்பிமாரில் ஹாரத்வாஜி திருவேங்கடநாதன் அழகப்பெருமாளேன் பாண்டி மண்டலத்துக் கருங்குடி
3. நாட்டு விசையங்குடி அரைய[ன்] சூரியதேவனான குவலையத் தரையனுக்காக இன்னாயநார் திருமுன்பே ஒரு ஸந்த்யாதீபம் சந்த்ராதித்தவ
4. ரை எரிப்பத(ர)க இவ(ர்) பக்கல் வாங்கின பணம் பந்நிரண்டுங் கைக்கொண்டு குடங்கொண்டு கோயில் புகுவார் இத்தன்மம் நடத்துவதாக கல்வெட்டிக் குடுத்தேந் அழகப்பெருமாளேந்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | ஆங்கிரச, |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.14-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | குன்னத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 184/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | போசளர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 10 |
| அரசன் | : | வீரவல்லாளன் | | | |

இடம் : இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் மகாமண்டபம் கிழக்கு வடபுறச் சுவர் - நுழைவு வாயில்.

குறிப்புரை : இலட்சுமி நாராயணப்பெருமாள் கோயில் திருப்பணியின் போது ஸ்நபன மண்டபத்தில் வடகிழக்குக் காலின் மேல் போதிகையைக் குன்றத்தூர் வேளாளரில் கணவாளர் குல உடையாண்டான் அழகப்பெருமாள் தாதன்பிள்ளை ஆண்டானான காலிங்கராயன் தன் தருமமாகச் செய்தார்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாள தேவர்க்கு வ௲துவிராச்சியம் பண்ணி அருளாநின்ற ஆங்கிரஸ [ஸ]*ംவசுஸரத்துத் தை மாதம் குறுப்பு னாட்டுக் குன்றத்தூரில் வெள்ளாழன் கணவாளரில்

2. உடையாண்டானான அழகப்பெருமாள் தாதன்பிள்ளை ஆண்டானான காலிங்கரா[ய]*னேன் இலக்ஷ்மி நாராயணப் பெருமாள் கோயிலில் ஸ்நபந மண்டபத்துக் கீழை வடக்கிற்காலில் மேற் போதிகை யென் தன்மம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 27 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1312 |
| ஊர் | : | குன்னத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 185/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 11 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் மகாமண்டப கிழக்கு சுவர் நுழைவு இடப்புறம்.

குறிப்புரை : குன்றத்தூர் வேளாளரில் தேவந்தை குல நக்காண்டான் இனியபிள்ளை என்பவர் ஒரு விளக்கு எரிக்கப் பத்து பணம் கொடையாகக் கொடுத்தார்.

## கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்ம . . . . . ரிபுவனச் சக்ரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு உ௰(எ) . . . . . குறுப்பு நாட்டு குன்றத்தூர்
2. நாயநாற் லக்ஷ்மிநாராயணப்[ெ]பருமாள் கோயில் நம்பிமாரில் *ஹாரதாஜி* திருவேங்கடதாஸன் . . . . . . குறுப்பு நாட்டுக் குன்றத்தூரில் வெள்ள
3. ாழரில் தேவெந்தைகளில் இ . . . நக்காண்டான் இனிய பிள்ளைக்காக இன்னாயனார் திருமுன்பே ஒரு . . . ாசித்தவரை எரிப்பதாக இ[வர் பக்கல்] வாங்கின
4. பணம் பத்துங் கைக் கொ(ண்டு) குடங் கொ[ண்டு] புகுவான் இத்தன்ம . . . . . . துவதாக . . . . . . . . ன் அழகப்பெருமாளேன்.

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1104/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 27 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1312 |
| ஊர் | : | குன்னத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 186/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழும் கிரந்தமும் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 12 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் கிழக்குச் சுவர் (நுழைவாயில் இடப்புறம்).

குறிப்புரை : இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் நம்பிமாரில் பாரத்வாஜி திருவேங்கடதாசன் அழகப்பெருமாள், சோழ மண்டலத்துக் குலோத்துங்கசோழ வளநாட்டு பெரும்போருடையான் திருஞானசம்பந்தனிடம் இருபத்து நான்கு பணம் பெற்றுக் கொண்டு இரண்டு சந்தியா தீபம் எரிக்க ஒப்புக்கொண்டார்.

**கல்வெட்டு:**

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மரான திரிபுவனச் சக்ரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்[கு] யா[ண்]டு உயஎ [வது] பங்குனி மாத முதல் குறுப்பு நாட்டுக் குன்ற
2. த்தூர் நாயனார் லக்ஷ்மிந[ா]ரயணப் பெருமாள் கோயில் நம்பிமாரில் *ஹாரத்வாஜி* திருவேங்கடதாஸன் அழகப்பெருமாளென் சோழமண்டலத்து குலோத்துங்கசோழ
3. வளநாட்டு வெள்ளானாட்டு பெரும்போருடையான் திருவிடைமருதுடையான் திருஞானசம்பந்தனுக்காக இந்நாயனார் திருமுன்பு இரண்டு *ஸந்த்யாதீ*பம் *சந்த்ராதி*த்தவரை எரிப்பதாக இவர் [பக்கல் வா]
4. ங்கின பணம் இருபத்துநாலு கைக்கொண்டு குடங்கொண்டு கோயில் புகுவார் இத்தன்மந் நடத்துவதாக கல்வெட்டிக் கு[டுத்தேன்] அழகப்பெருமாளேன்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 28 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1313 |
| ஊர் | : | குன்னத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 187/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழும் கிரந்தமும் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 13 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் மகாமண்டபம் தெற்குச் சுவர்.

குறிப்புரை : இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் நம்பிமாரில் பாரத்வாஜி திருவேங்கடதாசன் அழகப்பெருமாள், மலையாளரில் தில்லைக்கூத்தனிடம் பன்னிரண்டு பணம் பெற்றுக் கொண்டு ஒரு சந்தியா தீபம் எரிக்க ஒப்புக்கொண்டார்.

## கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு உ௰அ ஆடி மாதம் குறுப்பு நாட்டுக்
2. குன்றத்தூர் லக்ஷ்மிநாரயணப் பெருமாள் னம்பிமாரில் *பாரத்வாஜி* திருவேங்கடநாதன் அழகப்பெருமாளேன் மலையாளரில் கண
3. . . . . . . . . ர்மகன் தில்லைக்கூத்தர்க்காக இன்னாயனார் திருமுன்பே ஒரு ஸந்த்யாதீபம் *சந்த்ராதித்*த்தர்வரை எரிப்பதாக இவர் பக்கல் வாங்கின பணம் ௰உ இப் . . . . . .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 28 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1313 |
| ஊர் | : | குன்னத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 188/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழும் கிரந்தமும் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 14 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் மகாமண்டபத் தென் சுவர்.

குறிப்புரை : மலைமண்டலத்து ஏறாளபுரத்து வியாபாரி உமையன் காற்கரையான் கருணாலை என்பவர் இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் நம்பிமாரில் பாரத்வாஜி திருவேங்கடதாசன் அழகப்பெருமாளிடம் பன்னிரண்டு பணம் கொடுத்து இறைவன் திரு முன்பு தன் பெயரில் ஒரு சந்தியாதீபம் எரிக்க வேண்டிக் கொண்டார்.

**கல்வெட்டு:**

1. . . . . . . . கோச்சட . . . . . . . திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீஸுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு உ௰அ வது சித்திரை மாதம்
2. . . . . . . . தூரில் நாயனார் லக்ஷ்மி நாராயணப் பெருமாள் கோயிலில் நம்பிமாரில் *பாரத்வாஜி* திருவேங்
3. . . . . . . . ளேன் மலைமண்டலத்து ஏறாளபுரத்து வியாபாரி உமையன் காற்கரையான் கருணாலை
4. . . . . . ந்தாதீபத்துக்கு இற்றை நாளில் நான் இக்கோயிலில் நம்பிமாரில் அழகப்பெருமாள் கையில் குடுத்த பணம் ௰உ
5. . . . . . வியவி . . . . பணம் பன்னிரண்டும் என் பேரால் திருமுன்பே ஒரு ஸந்த்யாதீபம் . . . . .

## த.நா.அ. தொல்லியல் துறை                தொடர் எண் :- 1107/2003

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 12 |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1277 |
